பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com
077 120 9996
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

Registered as a Newspaper
# உதயன்
சுடர் : 41
கதிர் : 240
வெள்ளிக்கிழமை
24 ஜூலை 2026
ஆடி 08 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

செம்மணிப் புதைகுழியில்

# குற்றங்கள் நிகழ்ந்தனவா? தெளிவாகத் தெரியாதாம்!

குற்றப்புலனாய்வுப் பிரிவு நீதிமன்றத்தில் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், ஜூலை 24**

**செம்மணிப் புதைகுழியில் குற்றங்கள் நிகழ்ந்ததா என்று உறுதியாகத் தெரியவில்லை. எனவே, மீட்கப்பட்ட என்புத் தொகுதிகளின் காலப்பகுதியை அறிவதற்கான பரிசோதனைகளை மேற்கொள்ள அனுமதிக்க வேண்டும் - இவ்வாறு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் விண்ணப்பம் செய்துள்ளனர்.**

»11

நீதி அமைச்சருக்கு எதிரான

## நம்பிக்கையில்லாப் பிரேரணை; இன்றையதினம் வாக்கெடுப்பு!

கொழும்பு, ஜூலை 24
நீதி அமைச்சர் ஹர்ஷண நாணயக்காரவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதமும் வாக்கெடுப்பும் இன்று நடைபெறவுள்ளன.
நாடாளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பான குழுக்கூட்டம் சபாநாயகர் தலைமை

»11



## மழைக்கால அங்கியுடன் சிறுவரின் என்புத்தொகுதி

யாழ்ப்பாணம், ஜூலை 24
செம்மணி மனிதப் புதைகுழிக்குள் இருந்து மழை அங்கியை ஒத்த அங்கியுடனும் காலில் காலுறையுடனும் சிறுவரின் என்புத்தொகுதி ஒன்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

»11

## கன்னியாயில் அமைவது விகாரைக் கட்டுமானமல்ல

தொல்லியல் திணைக்களப் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 24
திருகோணமலை கன்னியாய் பகுதியில் அமைக்கப்படுவது விகாரைக் கட்டுமானம் அல்ல என்று தொல்லியல் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் செனரத் விக்கிரமசிங்க தெரிவித்தார். யாழில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் அவர் மேலும் தெரிவித்ததாவது: திருகோணமலை கன்னியாய் பகுதியில் புதிதாக எவ்வித கட்டுமானப் பணிகளும் மேற்கொள்ளப்படவில்லை. ஏற்கனவே உள்ள தொல்பொருள்களைப் பாதுகாக்கும் பணிகளே இடம்பெற்று வருகின்றன. கன்னியாய் வெந்நீரூற்றுப் பகுதி ஒரு தொல்லியல் தளமாகும். அது தொல்லியல் திணைக்களத்திற்குச் சொந்தமானது என வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. அங்குள்ள தொல்பொருள்

»11

அத்துமீறிய மீன்பிடி;

## ஒன்பது மீனவர்கள் கைது

மன்னார், ஜூலை 24
இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடி

»11

## திஸ்ஸ விகாரைக்கு விரைவில் தீர்வாம்!

அமைச்சர் சுனில் செனவி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 24
தையிட்டியில் திஸ்ஸ விகாரையை மையப்படுத்தி ஏற்பட்டுள்ள பிரச்சினைக்கு விரைவில் தீர்வு வழங்கப்படும் என்று புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் ஹினிதும சுனில் செனவி தெரி

»11

## காங்கேசன் துறைமுகத்தை இந்தியாவிடம் வழங்குங்கள்

பிரதான எதிர்க்கட்சி வலியுறுத்து

கொழும்பு, ஜூலை 24
இந்தியாவின் ஒத்துழைப்பின்றி பிராந்தியத்தில் இலங்கையால் தனித்து இயங்க முடியாது. ஆதலால், காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தி திட்டம் இந்தியாவிடம் ஒப்படைக்க வேண்டும் என பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்தியுள்ளது.
ஐக்கிய மக்கள் சக்தியின் ஊடகப்

»11

## உயர்தரப் பரீட்சையை ஒத்திவைக்க முடியாது

மாணவர்களின் மனு தள்ளுபடி

கொழும்பு, ஜூலை 24
அடுத்த மாதம் நடைபெறவுள்ள 2026ஆம் ஆண்டுக்கான க.பொ.த. உயர்தரப் பரீட்சையை இரு மாதங்களுக்கு ஒத்திவைக்குமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை, விசாரணைக்கு எடுத்துக் கொள்ளாமல்


»11

கன்னியாயில்

## சட்டவிரோத விகாரைக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு

திருகோணமலை, ஜூலை 24
திருகோணமலை கன்னியாய் வெந்நீரூற்று பிள்ளையார் ஆலயம் அமைந்திருந்த பகுதியில் சட்டவிரோதமாக விகாரை அமைக்கும் பணிகள் இடம்பெற்று வரும் நிலையில் இதற்கு எதிராக வழக்குத்

»11



## கறுப்பு ஜூலை நினைவேந்தல் நேற்று

### நாடாளுமன்றில்

கொழும்பு, ஜூலை 24
கறுப்பு ஜூலை இனக்கலவரத்தின் 43ஆவது நினைவேந்தல் நிகழ்வு நாடாளுமன்ற வளா

»11



### புலம்பெயர் தேசங்களில்




»11

முச்சந்தி முனி

"இப்பிடி வகைதொகையா கொடூரமா செத்தவையின்ர எலும்புகளை எடுத்த பிறகும் இப்பிடிச் சொல்றது ஞாயமோ?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொவிசெத**

| | |
|---|---|
| திகதி | 23.07.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4499 |
| ஆங்கில எழுத்து | V |
| வெற்றி இலக்கங்கள் | 33 54 55 74 |
| விசேட எழுத்து | V |

**ஹந்தஹஹண ராசி சுப பலன்**

| | |
|---|---|
| திகதி | 23.07.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1566 |
| வெற்றி இலக்கினம் | மகரம் |
| வெற்றி இலக்கங்கள் | 04 09 20 53 |

**NLB ஜய**

| | |
|---|---|
| திகதி | 23.07.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0525 |
| ஆங்கில எழுத்து | F |
| வெற்றி இலக்கங்கள் | 5 8 6 8 |

**மெகா பவர்**

| | |
|---|---|
| திகதி | 23.07.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2605 |
| ஆங்கில எழுத்து | T |
| சுப்பர் இலக்கம் | 04 |
| வெற்றி இலக்கங்கள் | 08 22 28 48 |

**மஹஜன சம்பத**

| | |
|---|---|
| திகதி | 23.07.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6257 |
| ஆங்கில எழுத்து | L |
| வெற்றி இலக்கங்கள் | 8 6 1 2 9 2 |

**தன நிதானய**

| | |
|---|---|
| திகதி | 23.07.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2287 |
| ஆங்கில எழுத்து | N |
| வெற்றி இலக்கங்கள் | 27 39 53 66 |
| விசேட எழுத்து | N |

**சுப தவசக்**

| | |
|---|---|
| திகதி | 23.07.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0373 |
| வெற்றி இலக்கினம் | மேஷம் |
| வெற்றி இலக்கங்கள் | 16 27 40 |

# பல்கலைக்கழக பகிடிவதைகள்; ஒழிப்பதற்கு விசேட செயலணி

**கொழும்பு, ஜூலை 24**

**பகிடிவதைகளை முற்றிலும் ஒழிப்பதற்கான வழிமுறைகளை முன்வைக்க விசேட செயலணி ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. இந்தச் செயலணி மூலம் அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கும் விசேட வழிகாட்டல் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு வருகின்றன என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.**

நாடாளுமன்றத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற அமர்வில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 2020ஆம் ஆண்டு தொடக்கம் தற்போது வரை பல்கலைக்கழகக் கட்டமைப்பில் பகிடிவதை காரணமாக ஒருவர் உயிரிழந்துள்ள நிலையில் 106 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்தக் காலப்பகுதியில் பகிடிவதை தொடர்பாக மொத்தம் 141 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. அவற்றில் கடுமையான காயங்களை ஏற்படுத்தியமை தொடர்பில் மட்டும் 93 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

பகிடிவதைச் சம்பவங்கள் தொடர்பில் பல்கலைக்கழக மட்டத்தில் 28 விசாரணைக் குழுக்கள் நியமிக்கப்பட்டு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஊடாகத் தேவையான சட்டபூர்வ நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அத்துடன் விசேட செயலணி நியமனம்: அரச பல்கலைக்கழகங்களில் நிகழும் மனிதாபிமானமற்ற பகிடிவதைகளை முற்றிலும் ஒழிப்பதற்கான வழிமுறைகளை முன்வைக்க விசேட செயலணி ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழக மாணவர்களின் மன அழுத்தத்தைக் குறைக்கவும் அவர்களின் உளவியல் நலனை மேம்படுத்தவும் விசேட திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன - என்றார். (ச-இ)

**சுபிரி தன சம்பத**

| | |
|---|---|
| திகதி | 23.07.2026 |
| தினம் | வியாழக்கிழமை |
| வெற்றி வாரம் | 0965 |
| ஆங்கில எழுத்து | D |
| வெற்றி இலக்கம் | 3 6 0 0 2 0 |

**Super Ball DLB**

| | |
|---|---|
| திகதி | 23.07.2026 |
| தினம் | வியாழக்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 3231 |
| ஆங்கில எழுத்து | R |
| வெற்றி இலக்கம் | 13 19 21 44 |

**சனிதா DLB**

| | |
|---|---|
| திகதி | 23.07.2026 |
| தினம் | வியாழக்கிழமை |
| ஆங்கில எழுத்து | C |
| வெற்றி இலக்கம் | 07 16 29 56 |
| வெற்றி வாரம் | 5392 |

**SASIRI DLB**

| | |
|---|---|
| திகதி | 23.07.2026 |
| தினம் | வியாழக்கிழமை |
| வெற்றி வாரம் | 1061 |
| வெற்றி இலக்கம் | 16 19 45 |

**லக்ன ராசி DLB**

| | |
|---|---|
| திகதி | 23.07.2026 |
| தினம் | வியாழக்கிழமை |
| விருச்சிகம் | |
| வெற்றி இலக்கம் | 07 15 20 45 |
| சீட்டிழுப்பு வாரம் | 4943 |

**KAPRUKA DLB**

| | |
|---|---|
| திகதி | 23.07.2026 |
| தினம் | வியாழக்கிழமை |
| ஆங்கில எழுத்து | A |
| சுப்பர் இலக்கம் | 02 |
| வெற்றி இலக்கம் | 14 15 21 35 |
| வெற்றி வாரம் | 2407 |

**அத கோடிபதி DLB**

| | |
|---|---|
| திகதி | 23.06.2026 |
| தினம் | வியாழக்கிழமை |
| ஆங்கில எழுத்து | N |
| வெற்றி இலக்கம் | 08 14 16 26 |
| வெற்றி வாரம் | 3057 |

# வலுக்கட்டாய ஆட்சிக்கு முயல்கிறது அரசாங்கம்

## நாமல் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 24

வலுக்கட்டாயமாகவேனும் ஆட்சியைத் தக்கவைத்துக்கொள்வதற்குத் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முயற்சிக்கின்றது என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச குற்றஞ்சாட்டியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், தேசியப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதுடன் அடிப்படைவாதக் குழுக்கள் மற்றும் குற்றக் கும்பல்களை ஒடுக்குவதே பாதுகாப்புப் பிரதி அமைச்சரின் பிரதான பொறுப்பாகும். ஆனால், இந்த அரசாங்கத்தில் உள்ள பாதுகாப்புப் பிரதி அமைச்சரோ, எதிர்க்கட்சிகளை ஒடுக்கிவிட்டதாகக் கூறுகின்றார். இவர்களின் நோக்கம் என்னவென்றே புரியவில்லை. வலுக்கட்டாயமாகவேனும் ஆட்சியைத் தக்கவைத்துக்கொள்வதற்கே அரசாங்கம் முயற்சிக்கின்றது என்பதையே இவ்வாறான கருத்து புலப்படுத்துகின்றது-என்றார். (ச-44)



# அமெ. முன்னாள் தூதுவர் ஜாலியவுக்கு பிடியாணை

கொழும்பு, ஜூலை 24

அமெரிக்காவுக்கான முன்னாள் இலங்கைத் தூதுவர் ஜாலிய விக்ரமசூரியவைக் கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறு கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

அரசுப் பணத்தைத் தவறாகப் பயன்படுத்தியமை தொடர்பான குற்றச்சாட்டில் நீதிமன்றத்தில் ஆஜராகாமல் தலைமறைவாக உள்ளநிலையில் அவருக்குப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# வடக்கு மாகாணத்தில் 'மெட்ரோ பஸ்' சேவை

## அமைச்சர் பிமல் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 24

வடக்கு மாகாணத்தின் பொதுப் போக்குவரத்துச் சேவையை மேலும் வினைத்திறனாக்கும் வகையில், அடுத்த ஆண்டு முதல் யாழ்ப்பாணம் உள்ளிட்ட பல்வேறு நகரங்களில் 'மெட்ரோ பஸ்' சேவைகளை அறிமுகப்படுத்த எதிர்பார்ப்பதாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற அமர்வில் அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அடுத்த வருடத்தில் வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம் உள்ளிட்ட முக்கியமான நகரப் பகுதிகளில் மெட்ரோ பஸ் சேவைகளை அறிமுகப்படுத்த நாங்கள் திட்டமிட்டுள்ளோம். இதன் மூலம் வடக்கு மாகாணத்தின் பொதுப் போக்குவரத்துச் சேவை முழுமையாக வினைத்திறனாக்கப்பட்டு, மாற்றுத்திறனாளிகள் உட்பட அனைத்துப் பயணிகளுக்கும் இலகுவான சேவை உறுதி செய்யப்படும் - என்றார். (ச-இ)

# நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு மாறாகவே கன்னியாயில் விகாரை கட்டுமானம்

## சாணக்கியன் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 24

திருகோணமலை, கன்னியாய் பகுதியில் நீதிமன்ற உத்தரவுக்கு முரணான வகையில் மதம் சார்ந்த புதிய கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதற்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார். நாடாளுமன்றத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற அமர்விலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், கன்னியாய் பகுதி தொடர்பில் 2020ஆம் ஆண்டு வழங்கப்பட்ட நீதிமன்றத் தீர்ப்பில், அந்தப் பகுதியில் மதம் சார்ந்த எவ்விதக் கட்டுமானங்களையும் மேற்கொள்ளக் கூடாது எனத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த நீதிமன்ற உத்தரவை மீறி, மாவட்டச் செயலா மற்றும் ஏனைய அரச அதிகாரிகளின் பங்கேற்புடன் தொல்பொருள் திணைக்களத்தால் அங்கு மதம் சார்ந்த புதிய கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்தச் சம்பவத்துக்கு எதிராக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் எம்.ஏ. சுமந்திரன் ஊடாக உரிய சட்ட நடவடிக்கைகள் உடனடியாக முன்னெடுக்கப்படும் - என்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media


# இலங்கையில் முன்கூட்டியே தாக்கம் செலுத்தவுள்ள 'எல்-நினோ'

## சுற்றாடல் அமைச்சு அறிவிப்பு!

**கொழும்பு,ஜூலை 24**

**முன்னர் எதிர்பார்க்கப்பட்டதைவிட 'எல்-நினோ' காலநிலை மாற்றமானது இலங்கையில் முன்கூட்டியே தனது தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் எனச் சுற்றாடல் துறை அமைச்சர் கலாநிதி தம்மிக பட்டபெந்தி எச்சரித்துள்ளார்.**

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். எல்- நினோ காலநிலை மாற்றத்தின் உச்சகட்டத் தாக்கம் எதிர்வரும் நவம்பர் மாதமளவில் இலங்கையில் எதிர்பார்க்கப்படுகிறது. ஜூலை, ஓகஸ்ட் மற்றும் செப்ரெம்பர் ஆகிய மாதங்களில் நாடு முழுவதும்வறண்டவானிலை நிலவக்கூடும். அதனைத் தொடர்ந்து ஒக்ரோபர் முதல் டிசெம்பர் வரையிலான காலப்பகுதியில் நாட்டின் பல பகுதிகளில் பலத்த மழை பெய்யக்கூடும். இந்தக் காலநிலை மாற்றத்தால் ஏற்படக் கூடிய அனர்த்தங்கள் மற்றும் சாத்தியமான தாக்கங்களை எதிர்கொள்ளும் வகையில், அரச நிறுவனங்கள் மற்றும் ஊடகங்களின் செயற்பாடுகளை ஒருங்கிணைத்துச் செயற்பட உரிய தரப்பினருடன் கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. 'எல் -நினோ' என்பது ஒரு உலகளாவிய தீவிரமான காலநிலைமாற்றமாகும். எனவே அரசாங்கம் மற்றும் பொது மக்கள் தகுந்த முன்னெச்சரிக்கையுடன் செயற்படுவது அவசியமாகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)



## போக்குவரத்து அமைச்சுக்கு புதிய செயலாளர் நியமனம்!

கொழும்பு,ஜூலை 24

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர்ப்புற அபிவிருத்தி அமைச்சின் புதிய செயலாளராக கலாநிதி ஆசிரி கருணாவர்தனவை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நியமித்துள்ளார். அதற்கான நியமனக் கடிதத்தை ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க ஜனாதிபதி செயலகத்தில் வைத்து அவரிடம் வழங்கிவைத்தார். ஆசிரி கருணாவர்தன இதற்கு முன்னர் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகமாகப் பணியாற்றியுள்ளார். (ச-இ)

## 'செல்பி' மோகத்தால் பறிபோன உயிர்கள்



கண்டி,ஜூலை 24

கண்டி, பன்வில பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நக்கில்ஸ் தோட்டப் பகுதியில் அமைந்துள்ள நீர்வீழ்ச்சியருகே 'செல்பி' எடுக்க முயன்றபோது, பாறையிலிருந்து கீழே விழுந்து இரு சிறுவர்கள் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் புதன் கிழமை இடம்பெற்றது. உயிரிழந்த சிறுவர்கள் இருவரும் நக்கில்ஸ் தோட்டப்பகுதியைச் சேர்ந்த 13 மற்றும் 14 வயதுடையவர்களாவர். இந்தச்சிறுவர்கள் இருவரும் மேலும் நான்கு நண்பர்களுடன் சேர்ந்து நீர்வீழ்ச்சியில் நீராடுவதற்காகச் சென்றுள்ளனர். நீர்வீழ்ச்சிக்கு அருகே அமைந்துள்ள உயரமான பாறையில் நின்று செல்பி எடுக்க முயன்ற வேளையிலேயே எதிர்பாராத விதமாகத் தவறி கீழே விழுந்து உயிரிழந்துள்ளனர். (ச-இ)

## விடைபெறும் சீனத் தூதுவர்

கொழும்பு,ஜூலை 24

இலங்கைக்கான சீனத்தூதுவர் கீ ஷென்ஹொங் இந்த மாதம் 31ஆம் திகதியுடன் இலங்கையில் தனது சேவைக் காலத்தினைபூர்த்திசெய்துவிடை பெறவுள்ளதாக தெரிவித்துள்ளார். சீன மக்கள் விடுதலை இராணுவத்தின் 99ஆவது நிறுவன தின் வரவேற்பு நிகழ்வு கொழும்பு ஷங்கிரில்லா விடுதியில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டிருந்த தூதுவர் ஊடகவியலாளர்களுடன் உரையாடியபோது தனது விடைபெறும் விடயத்தை உறுதிப்படுத்தினார். 2020ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 30ஆம் திகதி மக்கள் சீனக் குடியரசின் இலங்கைக்கான தூதுவராக கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்ட கீ ஷென்ஹொங் கடந்த ஆறு வருடங்களாக அந்தப் பதவியில்செயற்பட்டிருந்தார். (ச-இ)

## சுகாதார உதவியாளருக்கு மரணதண்டனை!

கொழும்பு,ஜூலை 24

அரச மருத்துவமனை ஒன்றின் சுகாதார உதவியாளர் ஒருவருக்கு, வடமத்திய மாகாண மேல் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் மரண தண்டனையை விதித்து தீர்ப்பளித்துள்ளது. 2014 ஆம் ஆண்டில் எப்பாவல பகுதியைச் சேர்ந்த ஒருவரைக் கத்தியால் கழுத்தை அறுத்துக் கொலை செய்தார் என்ற குற்றச்சாட்டின்பேரில் சட்டமா அதிபரினால் பிரதிவாதிக்கு எதிராக அநுராதபுரம் மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டிருந்தது. அதற்கமைய இந்த வழக்கில் பிரதிவாதிக்கு எதிராக முறைப்பாட்டாளர் தரப்பினால் சுமத்தப்பட்டுள்ள கொலைக் குற்றச்சாட்டானது நியாயமான சந்தேகமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாக மேல் நீதிமன்ற நீதிபதி தெரிவித்து மரணதண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளார். (ச-இ)




## முருக்கைமரத்தை முறிச்சு வளர்க்கோணும்!

ஆடுற மாட்டை ஆடிக்கறக்கோணும், பாடுற மாட்டைப் பாடிக்கறக்கோணும், சொல்லுக் கேக்காதவையை பொலிஸை விட்டுத்தான் பிடிக்கோணும். கிட்டடியில 'பள்ளிக்கூடம் போகாத நாலு பெடியளை பொலிஸ் பிடிச்சுப் போட்டுது' என்டொரு செய்தியைப் பாத்திருப்பியள். அப்பிடிப் பிடிச்ச பெடியளை பொலிஸ் இரவு வரைக்கும் விடாம வைச்சிருந்ததால பிறகு அவையின்ர தாய் தேப்பன்மார் மனித உரிமைகள் ஆணைக்குழுவிட்ட முறைப்பாடு செய்திருக்கினம். அதுக்குப் பிறகு, மனித உரிமைகள் ஆணைக்குழு சொல்லித்தான் அந்த நாலு பெடியளையும் பிணையில போகலாம் எண்டு பொலிஸ்காரர் விட்டிருக்கினம். பள்ளிக்கூடம் போகாமல் நிண்டால் ரீச்சர்மாரோ இல்லாட்டி சிறுவர் நலன் உத்தியோகத்தர்மாரோதான் அந்தப் பிள்ளையளைப் பிடிச்சந்து பள்ளிக்கூடத்தில திரும்பச் சேர்ப்பினம். இதென்ன புதுவிதமா பொலிஸ் பிடிச்சிருக்கு? எண்டு கனபேர் யோசிப்பியள். ஆனால் பொலிஸ் பிடிச்சதுக்கும் காரணமிருக்கு.

இந்த நாலு பெடியளும் ஒரே ஊர்க்காரர். எல்லாரும் பதினாறு வயசுக்கும் குறைவான ஆக்கள். ஒருத்தருக்கு பத்து வயது. அவையள் நாலுபேரும் மூண்டு நாலு மாதமா பள்ளிக்கூடப் பக்கமே எட்டியும் பாக்கிறேலை, ஊரைச் சுத்துறதும், விளையாடுறதும் தான் அவையின்ர முழுநேர வேலை. பள்ளிக்கூடக் காரர் சொல்லி இவையை சிறுவர்நல உத்தியோகத்தர்மார் பள்ளிக்கூடத்தில திரும்பச் சேர்க்கிறதும் பிறகு அடுத்த நாளே அவை நிக்கிறதும் வாடிக்கையாப் போட்டுது. அந்த நாலு பெடியளும் பள்ளிக்கூடம் போகாமல் இப்பிடி ஊர்மேய்ஞ்சு கொண்டு திரியிறதைப் பற்றி அவையைப் பெத்தவையும் அக்கறை எடுக்கேலை. அதைவிட அந்தப் பெடியளை பள்ளிக்கூடத்தில சேர்க்கப் பாடுபட்ட உத்தியோகத்தமாரோட பெற்றார் மல்லுக்கட்டியிருக்கினம். 'எங்கட பெடியனுக்குப் படிப்பு வரேலை. அதால அவன் போகாமல் நிக்கிறான். நீங்கள் ஏன் ஆய்க்கினைப் படுத்திறியள்?' எண்டு சண்டையாம். அதாலதான் இனித் தங்களால ஏலாது எண்டு அவையள் உரிய இடத்தில சொல்ல, அதுக்குப் பிறகுதான் பொலிஸ்காரர் உந்த நாலுபெடியளையும் அப்பிடியே ஜீப்பில அப்பிக்கொண்டு வந்திருக்கினம்.

பள்ளிக்கூடம் போகாமல் ஊர்சுத்திறதால தங்கட பிள்ளையளின்ர எதிர்காலம் பாழாப்போகுதெண்டு கொஞ்சமும் அக்கறைப்படாமல் இருந்த பெற்றோர், பொலிஸ் பெடியளைப் பிடிச்சிட்டுதெண்டவுடன அடிச்சுப் பிடிச்சுக்கொண்டு பொலிஸ் ஸ்ரேசனுக்கு முன்னால குவிஞ்சிட்டினம். அவைக்கு ஒரு பாடம் படிப்பிக்கத்தான் பொலிஸ் கனநேரமா மினக்கெடுத்திப் போட்டு விட்டவையாம். இப்ப அந்த நாலு பிள்ளையளையும் ஒரு சிறுவர் இல்லத்தில விட்டு, அந்த இல்லத்தின்ர கண்காணிப்பில பள்ளிக்கூடம் ஒழுங்காப் போய்வர வேணும் எண்டு நீதிமன்றம் உத்தரவு போட்டிருக்கு. இப்பிடி பள்ளிக்கூடம் போகாமல் எதிர்காலத்தைப் பாழாக்கிறவையை கொஞ்சம் அதட்டி, உறுக்கித்தான் வழிக்கு கொண்டு வரோணும். இதால நன்மை அவைக்குத்தான் எண்டது இப்ப விளங்காட்டியும் பிற்காலத்தில விளங்கும். முருக்கைமரத்தை முறிச்சு வளர்த்தாத்தான் நல்லாக் காய்க்கும் கண்டியளோ!

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# கறுப்பு ஓர்பியஸ் யாழில் திரையிடல்

யாழ்ப்பாணம்,ஜூலை 24
யாழ்ப்பாணத் திரைப்படக் கழகத்தின் 47ஆவது திரைப்படக் காட்சியாக, கான்ஸ் திரைப்பட விழாவில் விருது பெற்ற கறுப்பு ஓர்பியஸ்(ஆங்கிலம்/பிரேசில்) திரைப்படம் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு, 18/2, அம்மன் வீதி (பலாலி வீதியிலுள்ள வீனஸ் மருத்துவமனை அருகில்) கந்தர்மடத்திலுள்ள எங்கட புத்தகங்கள் இல்லத்தில் திரையிடப்படும். மார்சல் கமூஸ் நெறியாள்கையில் உருவான இந்தத் திரைப்படம் முற்றிலும் இலவசமாகக் காட்சிப்படுத்தப்படும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (க)

# யாழ். ராணிக்கு 4 வயது!


கிளிநொச்சி,ஜூலை 24
யாழ். ராணி ரயில் சேவையை ஆரம்பித்து 4 வருடங்கள் கடந்துள்ள நிலையில், அதில் நாளாந்தம் பயணம் செய்யும் உத்தியோகத்தர்கள், ஆண்டு நிறைவை நேற்றுமுன்தினம் கேக்வெட்டிக் கொண்டாடினர்.
கிளிநொச்சி ரயில் நிலையத்தில் இடம்பெற்ற நிகழ்வில், கிளிநொச்சி மாவட்டச் செயலர் எஸ். முரளிதரன், ரயில்வே திணைக்களத்தின் வடமார்க்கத்துக்கான மேற்பார்வையாளர் வி.எம்.என். நிரந்த விசுந்தர ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர். (க-113, 25)




நீர்வேலி வாய்க்காற்தரவை மூத்த விநாயகர் ஆலயத்தின் ஐந்தாம் திருவிழாவின் போது, சுவாமி மயில், இடப வாகனங்களில் எழுந்தருளி வீதி வலம் வந்தார். (க-25)

# மாதாந்தச் சந்தை

யாழ்ப்பாணம்,ஜூலை 24
உடுவில் பிரதேச செயலகத்தால் ஜூலை மாதத்துக்கான மாதாந்தச் சந்தை எதிர்வரும் 27ஆம் திகதி திங்கட்கிழமை, பிரதேசசெயலக வீதியோரத்தில் நடத்துவதற்கு ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது.
எனவே தமது உற்பத்திப்பொருள்களை சந்தைப்படுத்த விரும்பும் தொழில் முயற்சியாளர்களை, இதில் இணைந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (க)



# புன்னைநீராவியில் மோதல் 6 கிலோ கஞ்சா கைப்பற்றல்

கிளிநொச்சி,ஜூலை 24
கிளிநொச்சி, தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புன்னைநீராவி பகுதியில் இரு குழுக்களுக்கு இடையே இடம்பெற்ற மோதலை அடுத்து, அங்கிருந்து 6 கிலோவுக்கும் அதிகமான கஞ்சாப் பொதிகளையும் 2 மோட்டார் சைக்கிள்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.
புன்னைநீராவி பகுதியில் இரு குழுக்கள் தீவிர மோதலில் ஈடுபட்டுவருவதாகத் தருமபுரம் பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் உடனடியாகச் சம்பவ இடத்துக்குப்பொலிஸார் விரைந்து சென்றபோது பொலிஸார் வருவதைக் கண்டதும் மோதலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த நபர்கள், தாம் பயன்படுத்திய பொருள்களை விட்டுவிட்டு தப்பிச் சென்றனர். குறித்த பகுதியைச் சோதனையிட்ட போது, பொதியிடப்பட்ட நிலையில் இருந்த 6 கிலோ 49 கிராம் கஞ்சா போதைப்பொருள் பொலிஸாரால் மீட்கப்பட்டது. அத்துடன் மோதலில் ஈடுபட்டவர்கள் விட்டுச் சென்ற இரண்டு மோட்டார் சைக்கிள்களையும் பொலிஸார் கையகப்படுத்தியுள்ளனர். சந்தேகநபர்கள் தொடர்பில் தருமபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-113-80)

# இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** மனதில் அவ்வப்போது சஞ்சலங்கள் ஏற்பட்டு நீங்கும். புதிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டாம். அக்கம்பக்கத்தில் இருப்பவர்களின் தலையீடு காரணமாகக் குடும்பத்தில் குழப்பம் ஏற்பட வாய்ப்பு உள்ளதால் பொறுமை அவசியம்.

**இடபம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். தாய்வழி உ றவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதரவகையில் சிறு சிறு சங்கடங்கள், வீண்செலவுகளும் ஏற்படக்கூடும். மாலையில் எதிர்பாராத செலவுகளால் கையிருப்புக் கரையும்.

**மிதுனம்:** மனதில் தெய்வபக்தி அதிகரிக்கும். நண்பர்கள்வழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். உடல் ஆரோக்கியம் மேம்படும். சிலருக்கு எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும்.

**கடகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். சிலருக்குத் தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படக்கூடும். பிற்பகலுக்குமேல் எதிர்பார்த்த நல்ல தகவல் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு.

**சிம்மம்:** எதிர்பார்க்கும் காரியங்கள் சாதகமாக முடியும். ஆனால், உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்களுடன் கருத்து வேறுபாடு ஏற்படக்கூடும் என்பதால் பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கன்னி:** பணப்புழக்கம் அதிகரிக்கும். புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். தொலைதூரத்திலிருந்து நீண்டநாள்களாக எதிர்பார்த்த நல்ல தகவல் இன்று வந்து சேரும்.

**துலாம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். முக்கியமான முடிவு ஒன்றைத் துணிச்சலுடன் எடுப்பீர்கள். வீட்டில் கலகலப்பான சூழ்நிலை காணப்படும்.

**விருச்சிகம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம் செலுத்தவும். கணவன் – மனைவிக்கிடையே கருத்துவேறுபாடு ஏற்பட்டு நீங்கும். உறவினர்களுக்காக செலவு செய்ய நேரிடும்.

**தனுசு:** தாய்மாமன்வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். காரியங்கள் முடிவதில் சிறு தாமதம் ஏற்படக்கூடும். மாலையில் மனதுக்கு மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.

**மகரம்:** மனதில் தைரியம் அதிகரிக்கும். புதிய முயற்சிகளில் ஈடுபடலாம். இளைய சகோதரர்கள் உங்கள் ஆலோசனையைக் கேட்டு வருவார்கள்.

**கும்பம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. சகோதரர்கள் பணம் கேட்டு வருவார்கள். உறவினர்கள்வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும்.

**மீனம்:** இன்று பொறுமையும்சகிப்புத்தன்மையும் அதிகம் தேவைப்படும். தாயின் அன்பும் ஆதரவும் மனதுக்கு உற்சாகம் தரும். உறவினர்கள் வகையில் வீண்மனஸ்தாபம் ஏற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

# கறுப்பு ஜூலையின் சாம்பலிலிருந்து ....!


இலங்கை வரலாற்றின் திசைவழியையே முற்றிலும் மாற்றி அமைத்து, எமது தாய்நிலத்தைச் சுடுகாடாகவும், இலட்சக்கணக்கான தமிழ் மக்களை வீடிழந்த அகதிகளாகவும் மாற்றிய '1983 கறுப்பு ஜூலை' இனப்படுகொலையின் 43ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் தாயகத்திலும் புலம்பெயர் தேசங்களிலும் நேற்றைய தினம் உணர்வுபூர்வமாக நினைவேந்தப்பட்டன. 1983ஆம் ஆண்டு ஜூலை 23ஆம் திகதி நள்ளிரவு தொடங்கி, நாட்டின் தென்பகுதி முழுவதும் தீப்பற்றி எரிந்த அந்தத் துயர்மிக்க நாள்கள், வெறும் ஒரு இனக் கலவரம் அல்ல; அது அப்போதைய பேரினவாத அரசாங்கத்தின் ஆசியோடும், அரச இயந்திரத்தின் துணையோடும் திட்டமிட்டு அரங்கேற்றப்பட்ட அப்பட்டமான தமிழ் இனப்படுகொலையாகும். நாற்பத்து மூன்று ஆண்டுகள் உருண்டோடிவிட்ட போதிலும், அன்று சிந்திய இரத்தக் கறைகளும், கொளுத்தப்பட்ட மனித உடல்களின் சாம்பல் சுவடுகளும் எமது வரலாற்று நெஞ்சில் ஆறாத வடுவாகவே இன்றும் நிலைத்திருக்கின்றன.

அன்றைய ஜே.ஆர். ஜெயவர்த்தன அரசாங்கத்தின் ஆளுகையின் கீழ், வாக்காளர் பட்டியல்களைக் கைகளில் ஏந்திக்கொண்டு, தமிழர்களின் வீடுகளையும், வர்த்தக நிலையங்களையும் அடையாளம் கண்டு தீக்கிரையாக்கிய பேரினவாதக் கும்பல்கள், வெலிக்கடைச் சிறைச்சாலைக்குள் அடைக்கப்பட்டிருந்த தங்கத்துரை, குட்டிமணி உள்ளிட்ட தமிழ் அரசியல் கைதிகளையும் கொடூரமாகப் படுகொலை செய்தன. வெறும் ஒரே வாரத்தில் ஆயிரக்கணக்கான அப்பாவித் தமிழர்கள் துடிதுடிக்கக் கொல்லப்பட்டனர், பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் உடுத்த துணியோடு அகதி முகாம்களில் தஞ்சம் புகுந்தனர். தமிழ் மக்கள் தங்களின் சொந்த மண்ணிலேயே அநாதைகளாகினர். இந்த இனப்படுகொலையின் நேரடி விளைவாகவே. அமைதி வழியிலான அரசியல் போராட்டங்களைக் கைவிட்டு, ஆயுதம் ஏந்திய விடுதலைப் போராட்டத்தை நோக்கித் தமிழ் இளைஞர்கள் திரளாக அணிதிரளும் வரலாற்று மாற்றம் ஏற்பட்டது. அத்துடன், உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு கடல் கடந்து ஓடிய தமிழர்களால், இன்று உலகம் முழுவதும் பரந்துவாழும் 'புலம்பெயர் தமிழ் சமூகம்' என்ற சக்திவாய்ந்த வெளியுறவுக் கட்டமைப்பு உருவானது.

கறுப்பு ஜூலை நிகழ்த்தப்பட்டு நான்கு தசாப்தங்களுக்கும் மேலாகிவிட்ட நிலையிலும், இலங்கை அரசியலில் தமிழ் மக்களுக்கான நீதியோ அல்லது பாதுகாப்பான அரசியல் தீர்வோ இன்னமும் எட்டப்படவில்லை என்பதுதான் கசப்பான உண்மையாகும். ஆட்சிக்கு வரும் ஒவ்வொரு தென்னிலங்கை அரசாங்கங்களும் மாற்றம் கொண்டு வருவோம் என்றும், கடந்த காலத் தவறுகளைத் திருத்துவோம் என்றும் மேடைகளில் முழங்கினாலும், தமிழ் மக்களின் பூர்வீக நிலங்களை ஆக்கிரமிப்பதிலும், தொல்லியல் மற்றும் பௌத்தமயமாக்கல் என்ற போர்வையில் எமது வரலாற்று அடையாளங்களை அழிப்பதிலும் ஒரே பேரினவாதக் கொள்கையையே பின்பற்றி வருகின்றன. கறுப்பு ஜூலையில் கொல்லப்பட்ட ஆயிரக்கணக்கான அப்பாவி மக்களுக்கு இன்றளவும் அரச மட்டத்தில் முறையான இழப்பீடோ, குற்றமிழைத்தோருக்குத் தண்டனையோ அல்லது பகிரங்க மன்னிப்போ கோரப்படவில்லை.

நினைவுகூரல் என்பது வெறுமனே கடந்த காலத் துயரங்களை அசைபோடுவது மட்டுமல்ல; அது எமது உரிமைகளுக்கான போராட்டத்தை அடுத்த தலைமுறைக்குக் கடத்தும் வரலாற்றுப் பொறுப்பாகும். கறுப்பு ஜூலையின் 43ஆவது நினைவேந்தல் எமக்கு உணர்த்தும் ஒரே செய்தி: தமிழ் மக்களின் சுயமரியாதை, நில உரிமை மற்றும் இறையாண்மை என்பன ஒருபோதும் ஒற்றையாட்சியின் கருணையால் கிடைக்கப் போவதில்லை என்பதாகும். தென்னிலங்கை அரசு உண்மையான நல்லிணக்கத்தை விரும்பினால், கடந்த கால அரச பயங்கரவாதக் குற்றங்களை ஒப்புக்கொண்டு, தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கும் உன்னதமான அரசியல் தீர்வை நோக்கி நகர வேண்டும். அதுவரை, கறுப்பு ஜூலையின் சாம்பலிலிருந்து எழுந்த எமது இனத்தின் நீதிக்கான குரல் உலகெங்கும் ஒலித்துக்கொண்டே இருக்கும்!


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com



## பொய்யாமொழி

**அறனழீஇ அல்லவை செய்தலின் தீதே**
**புறனழீஇப் பொய்த்து நகை**

**பொருள்:** அறத்தை அழித்துப் பேசி அறமல்லாதவைகளைச் செய்தலைவிட, ஒருவன் இல்லாதவிடத்தில் அவனைப் பழித்துப் பேசி நேரில் பொய்யாக முகமலர்ந்து பேசுதல் தீமையாகும்.




# அரையாண்டுக் காலப்பகுதியில் ஏற்றுமதி வருமானம் உயர்வு!

**கொழும்பு, ஜூலை 24**
**2026ஆம் ஆண்டின் முதல் 6 மாதங்களில் இலங்கையின் மொத்த ஏற்றுமதி வருமானம் 9,012.24 மில்லியன் அமெரிக்க டொலராகப் பதிவாகியுள்ளது என இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச்சபை தெரிவித்துள்ளது.**

இது 2025ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 8% வளர்ச்சியாகும்.
2026 இன் முதல் அரையாண்டில் பொருள்கள் ஏற்றுமதி வருமானம் 7,073.31 மில்லியன் டொலர்களாகப் பதிவாகியுள்ளது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 8.95% அதிகரிப்பாகும். இந்தக் காலப்பகுதியில் சேவை ஏற்றுமதித்துறையும் 4.49% வளர்ச்சியைப் பதிவு செய்து 1,938.94 மில்லியன் டொலரை ஈட்டியுள்ளது.
2026 ஜூன் மாதத்தில் மாத்திரம் மொத்த ஏற்றுமதி வருமானம் 1,658.62 மில்லியன் டொலராகப் பதிவாகியுள்ளதுடன் கடந்த ஆண்டின் ஜூன் மாதத்தை விட 12.53% வளர்ச்சியாகும்.
இதில் பொருள்கள் ஏற்றுமதி 1,314.10 மில்லியன் டொலராகவும், சேவை ஏற்றுமதி 344.52 மில்லியன் டொலராகவும் பதிவாகியுள்ளது. (ச-இ)



# சட்டவிரோதமாக கடத்திய 300 கைபேசிகள் மீட்பு!


சுங்க வரி செலுத்தாது சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட 5 கோடி ரூபா பெறுமதியான 300க்கும் மேற்பட்ட நவீன கையடக்கத் தொலைபேசிகள் கொள்ளுப்பிட்டியில் உள்ள பிரபல வர்த்தக வளாகத்தின் இரகசிய களஞ்சியசாலை ஒன்றில் வைத்து கைப்பற்றப்பட்டுள்ளன.
இதன்போது வெவ்வேறு நிறுவனங்களுக்குச் சொந்தமான 300க்கும் மேற்பட்ட நவீன கையடக்கத் தொலைபேசிகள் மீட்கப்பட்டதுடன், சம்பவத்துடன் தொடர்புடைய நபர் ஒருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளார். (ச-இ)

# 3.930 கிலோ தங்கத்துடன் 10 பேர் கைது

கொழும்பு,ஜூலை 24
மடவளையில் உள்ள விடுதியொன்றில் முன்னெடுக்கப்பட்ட திடீர்ச் சுற்றிவளைப்பின்போது 3.930 கிலோகிராம் தங்கத்துடன் 10 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
வத்தேகம பொலிஸாரினால் இந்தத் திடீர்ச் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. கைதானவர்களில் 2 பெண்களும் அடங்குகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.
அவர்களிடம் இருந்து 16.9 மில்லியன் ரூபா பணமும் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-இ)

# டெங்குச்சோதனையில் துப்பாக்கி கைப்பற்றல்

தேசிய டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்துக்கு அமைவாக, பெலவத்தை பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட வளாகப் பரிசோதனையொன்றின்போது, வீடொன்றிலிருந்து துப்பாக்கியொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
இதனையடுத்து, பொலிஸாரால் குறித்த துப்பாக்கி பொறுப்பேற்கப்பட்டதுடன், வீட்டின் உரிமையாளரான பெண்ணும் கைதுசெய்யப்பட்டுள்ளார். (ச-இ)



# கறுப்பு ஜூலைக்கு நீதி கிட்டவில்லை

## சாணக்கியன் எம்.பி. சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூலை 24
கறுப்பு ஜூலைக் கலவரங்களால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் தற்போதும் நீதிக்காகக் காத்திருக்கின்றனர்
இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
1983ஆம் ஆண்டு இலங்கையில் கறுப்பு ஜூலைக் கலவரங்கள் இடம்பெற்றன. இற்றைக்கு 43 ஆண்டுகளுக்கு முன்னர் இடம்பெற்ற அந்தக் கலவரங்களுக்கு நீதியென்பது இன்னமும் எட்டாக் கனியாகவே இருந்து வருகின்றது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வழங்கும் நடைமுறைகளை இந்த அரசாங்கம் விரைவாக முன்னெடுக்க வேண்டும் - என்றார். (ம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சுழிபுரம் விக்ரோறியாக

150 ANNIVERSARY

# ஆவது ஆண்டு நிறைவு சி

## நல்லொழுக்கமிக்க பிரஜைகளை உருவாக்கிய பெருமைமிகு பாடசாலை



யா/விக்ரோறியாக் கல்லூரி தனது 150ஆவது ஆண்டு விழாவைக் கொண்டாடும் இந்நன்னாளில், எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும் இறையாசிகளையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

1876ஆம் ஆண்டு தோற்றம் பெற்று, கடந்த நூற்றைம்பது ஆண்டுகளாக கல்வி, ஒழுக்கம், பண்பாடு, விளையாட்டு போன்ற சகல துறைகளிலும் பல சாதனைகளைப் படைத்துள்ளது. மற்றும் ஆன்மீக விழுமியங்களை மாணவர்களிடையே விதைத்து, சமூகத்திற்கு எண்ணற்ற அறிஞர்கள், கல்விமான்கள் மற்றும் நல்லொழுக்கமிக்க பிரஜைகளை உருவாக்கியுள்ள இப்பெருமைமிகு பாடசாலை உண்மையிலேயே பாராட்டுக்குரியது. 150ஆவது ஆண்டு விழா வெற்றிகரமாக நடைபெற எல்லாம் வல்ல சிவகாமி அம்பிகா சமேத நடராஜ பெருமானின் பேராசீர்வாதமும், அன்னை சரஸ்வதியின் அருளும் கல்லூரியின் மீது என்றும் பொழிய, மேலும் பல தலைமுறைகளுக்கு அறிவொளி வழங்கி, சகல துறைகளிலும் புதிய சாதனைகளைப் படைத்து சிறப்புடன் வளர இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**பிரம்மஸ்ரீ.கு.சற்குணராஜசர்மா**
பறாளாய், சுழிபுரம்.

## விழுமியங்கள் கொண்டது விக்ரோறியா



சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் 150ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வெளியிடப்படும் இவ்விழா மலரில் எனது மனமார்ந்த வாழ்த்துச் செய்தியைப் பகிர்ந்து கொள்வதில் நான் மிகுந்த மகிழ்ச்சியும் பெருமையும் அடைகின்றேன்.

1876ஆம் ஆண்டு நிறுவப்பட்ட விக்ரோறியாக் கல்லூரி, கடந்த ஒன்றரை நூற்றாண்டிக்கும் மேலாக கல்விச் சிறப்பு, ஒழுக்கம், தலைமைத்துவப் பண்புகள் மற்றும் சமூகப் பொறுப்புணர்வு ஆகிய உயரிய விழுமியங்களை மாணவர்களிடையே வளர்த்தெடுத்து நாட்டின் கல்வி வரலாற்றில் தனித்துவமான இடத்தைப் பெற்றுள்ள பெருமைமிக்க பாடசாலையாக திகழ்கிறது. 1948ஆம் ஆண்டு வரை தனியார் கல்விப் பாடசாலையாக செயற்பட்ட விக்ரோறியாக் கல்லூரி பின்னர் அரசாங்கத்தின்கீழ் கொண்டுவரப்பட்டு அரசாங்கப் பாடசாலையாக மாற்றப்பட்டது. அதன்பின்னர் தரமான கல்வியை வழங்கும் முன்னணி கல்விப் பாடசாலையாகத் தொடர்ந்து வளர்ச்சியடைந்து சமூகத்திற்கும் நாட்டிற்கும் பல சிறந்த ஆளுமைகளை உருவாக்கி வருகின்றது.

இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க 150ஆவது ஆண்டு நிறைவில், விக்ரோறியாக் கல்லூரி தனது புகழ்மிக்க கல்விப் பாரம்பரியத்தைத் தொடர்ந்து நிலைநிறுத்தி, எதிர்காலத்திலும் எண்ணற்ற சாதனைகளைப் படைத்து கல்வித்துறையில் மேலும் சிறப்புடனும் பெருமையுடனும் ஒளிர என் மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**இராமலிங்கம் சந்திரசேகர்**
கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர்

## கல்வித்துறையின் கலங்கரை விளக்கம்



வடக்கு மாகாணத்தின் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வலிகாமம் வலய ஆளுகைக்குள் காணப்படும் சிறந்த கல்விப் பாரம்பரியத்தினையும் சமய பண்பாட்டு கலாசாரத்தினையும் பேணுகின்ற தனித்துவமான பாடசாலைகளில் ஒன்றாகத் திகழ்கின்ற யா/விக்ரோறியாக் கல்லூரியின் 150ஆவது ஆண்டு விழாவைக் கொண்டாடும் இத்தருணத்தில் அதனை வாழ்த்துவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

“மனித வாழ்வின் விழுமியங்களை ஒழுங்குபடுத்துவது கல்வி எனும் பெருஞ் செல்வமாகும்” என்பதனை மனதிற்கொண்டு வலிகாமம் மேற்குப் பிரதேசத்தின் கல்வி வளர்ச்சிக்காக தன்னிகரில்லாச் சேவையாற்றி கல்விப் பாரம்பரியத்தினையும், ஒழுக்க விழுமியங்களையும் பேணுகின்ற தனித்துவமான பாடசாலையாக யா/விக்ரோறியாக் கல்லூரி இன்றும் மிளிர்கின்றமை குறிப்பிடத்தக்கது.

வலிகாமம் மேற்குப் பிரதேசத்தின் கல்வித்துறையில் கலங்கரை விளக்காக யா/விக்ரோறியாக் கல்லூரி விளங்குகின்றது. இக்கல்லூரி உருவாக்கிய நல் மாணாக்கர்கள் அதன் மகத்துவத்தையும் பெருமையையும் பறைசாற்றுகின்றனர்.

பரீட்சைப் பெறுபேறுகள் விளையாட்டு மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகள் போன்ற பல துறைகளிலும் எமது மாகாணத்தின் பெருமைக்கு இக்கல்லூரியின் பங்களிப்பு கணிசமானதாகும். மேலும் நல்லறிவும், செயலும், விருத்தியும், கலையும், பண்பாடும், இலக்கியமும் என நல்மாணாக்கர்களை உருவாக்கும் இப்பாடசாலையின் வளர்ச்சிக்குப் பங்களிப்புசெய்த அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் ஏனைய நலன்விரும்பிகள் அனைவரையும் பாராட்டுவதுடன் காலத்தின் தேவையறிந்து அறிவும், ஒழுக்கமும், நற்பண்புகளும், ஆளுமை விருத்தியும் கொண்ட நல்லதொரு இளைய தலைமுறையினை உருவாக்குவதில் தொடர்ந்து இப்பாடசாலை ஊக்கமுடன் செயற்பட வேண்டுமெனவும் 150ஆவது ஆண்டு விழா நிகழ்வுகள் சிறப்புறவேண்டுமெனவும் இறையாசியை வேண்டி மனதார வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. ம.பற்றிக் டிறஞ்சன்**
செயலாளர்,
கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும்
இளைஞர் விவகார அமைச்சு, வடமாகாணம்.

## அபிவிருத்திக்கு அர்த்தமுள்ளதாக பங்களிக்கும் பாடசா

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் 150ஆவது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடும் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர் மற்றும் நலன்விரும்பிகள் அனைவருக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்வதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

ஒன்றரை நூற்றாண்டுகளாக, விக்ரோறியாக் கல்லூரியானது அறிவின் கலங்கரை விளக்காகத் திகழ்வதுடன், அறிவு, ஒழுக்கம், நற்பண்பு மற்றும் சமூக சேவைக்கான அர்ப்பணிப்புடன் கூடிய பல தலைமுறைகளை உருவாக்கி வந்திருக்கின்றது. வடமாகாணத்திலும், ஒட்டுமொத்த நாட்டிலும் கல்வித்துறைக்காக இக்கல்லூரி ஆற்றியுள்ள அளப்பரிய பங்களிப்பானது அதன் ஆசிரியர்களின் அர்ப்பணிப்பையும், சமூகத்தின் ஆதரவையும் மாணவர்களின் மன உறுதியையும் பிரதிபலிக்கிறது. இலங்கை தனது தேசிய மீளெழுச்சிக்கான பயணத்தைத் தொடர்ந்து முன்னெடுத்துவரும் வேளையில், விக்ரோறியாக் கல்லூரி போன்ற

கல்வி நிறுவனங்கள், எதிர்க
ஒற்றுமை, தர்க்கரீதியான சிந்த
புணர்வு மற்றும் சமவாய்ப்புக
முக்கியத்துவம் போன்ற குண
பாட்டு ரீதியாகப் புகட்டுவதில்
வகையில், இக்கல்லூரி தொ
நாட்டின் அபிவிருத்திக்கு அர்த்
என நான் உறுதியாக நம்புகி
ரியின் 150ஆவது ஆண்டு நி
யான முன்னேற்றத்திற்கும் சுப
தெரிவித்துக்கொள்கிறேன்.

## தேசிய மட்டத்தில் திறமை காட்டிய கல்லூரி



1876ஆம் ஆண்டு நிறுவப்பட்ட சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி படிப்படியாக வளர்ச்சியுற்று, 1AB பாடசாலையாகவும் தரமுயர்த்தப்பட்டு தற்போது 1150 மாணவர்களைக் கொண்டு, தனது அர்ப்பணிப்பு மிக்க சேவை மூலம் கல்விப் புலத்தில் தமது குறிக்கோள்களை அடைவதற்கான ஆர்வம்மிக்க ஒரு இளம் தலைமுறையை உருவாக்கி வருகின்றமை பாராட்டத்தக்கது.

பாடசாலைகள், மாணவர்களுக்கு கல்வி அறிவைப் புகட்டுவதோடு இல்லாமல் அவர்களது தலைமைத்துவத் திறன்களை வளர்த்தெடுக்கவும், படைப்பாற்றல் திறனை வெளிக்கொணரவும், விமர்சன சிந்தனைத் திறன்களை வளர்க்கவும், சமூகத்துடனான நட்பை வலுப்படுத்தவும் பெரிதும் உறுதுணையாக இருக்கின்றன.

இக்கல்லூரியின் மாணவர்கள் கடந்த காலங்களில் கல்விசார்ந்த நடவடிக்கைகளுடன் மட்டுமல்லாது இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் கோட்ட மட்டம், மாகாணமட்டம் மற்றும் தேசியமட்டத்திலும் தமது திறமைகளினை வெளிக்காட்டி கல்லூரிக்குப் பெருமை சேர்த்திருப்பது குறிப்பிடத்தக்கது. இதன் மூலம் கல்லூரியின் புகழ் எங்கும் பரவும் வகையில் அர்ப்பணிப்புடன் செயலாற்றி அவர்களை வழிநடத்திய அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கும் எனது பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. நாகலிங்கம் வேதநாயகன்**
ஆளுநர், வடக்கு மாகாணம்.

## சாதனைகளால் உயர்ந்த கல்லூரி



யா/விக்ரோறியாக் கல்லூரியின் நூற்று ஐம்பதாவது ஆண்டு விழாவை முன்னிட்டு வெளிவரும் நூற்றாண்டு விழா மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

இப் பாடசாலை பல தசாப்தங்களாக வலிகாமம் கல்வி வலயத்தில் புகழ்பெற்றதொரு பாடசாலையாக விளங்கு கின்றது. நூற்றாண்டு காணும் இப் பாடசாலை படிப்படியாக தரமுயர்த்தப்பட்டு இன்று 1AB பாடசாலையாக பாடசாலை சமூகத்தினரின் பங்களிப்புடன் கல்விப்பணி ஆற்றிவருகின்றமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் பாடசாலைமட்ட குழுக்கள் மற்றும் மன்றச் செயற்பாடுகளுடான இணைப்பாடவிதமானச் செயற்பாடுகளிலும் மாணவர்களை ஈடுபடுத்தி அவர்களின் ஆளுமை விருத்திக்கான பங்களிப்பினை வழங்கிவருகின்ற அதேவேளை சாதனைகள் பலவற்றையும் பதிவுசெய்துள்ளமை சிறப்பானது. இப்பாடசாலை இனிவரும் காலங்களிலும் கல்வி அடைவுகளிலும் இணைபாடவிதானச் செயற்பாடுகளிலும் நிறைவான சாதனைகளைப் பெற்றுக்கொள்ளவும் சிறப்பான கல்விப்பணியினை மாணவர்களுக்கு வழங்கிடவும் வாழ்த்துகின்றேன். மாணவர்கள் சார்பாகச் செயற்படும் அனைவருக்கும் பாராட்டுக்கள்.

**திரு. யோ. ஜெயச்சந்திரன்**
மாகாணக்கல்விப் பணிப்பாளர்,
மாகாண கல்வித் திணைக்களம்,
வடக்கு மாகாணம்.

## தனித்துவமான அம்சங்

வலிகாமம் கல்வி வலயத்தில் காணப்ப
லைகளில் விக்ரோறியாக் கல்லூரியும்
டசாலை தனக்கென தனித்துவமான ப
தன்னகத்தே கொண்ட சிறந்த பாடச
பாடசாலை 150ஆண்டுகள் நிறைவு பெ
இந்தப் பாடசாலையானது தொடர்ச்சிய
சாதனைகளை செய்துவருகின்றது. அத
பாகவும், இணைப்பாட விதான செயற்ப
வும் இப்பாடசாலையின் செயற்பாடுகள்
இத்தகைய பெறுபேறுகளைப் பெற்றுக்
கிய பாடசாலை அதிபர், ஆசிரியர்கள்,
கத்தினர், பழைய மாணவர்கள் அனைவ
இதுபோன்று எதிர்காலத்திலும் சிறந்த
டும் என்பதுடன், இப்போது வெளிவர இ
ருவதற்கு என்னுடைய அகம் நிறைந்
கின்றேன்.

## வரலாற்றில் விக்

யாழ்ப்பாணக் குடாநாட்டின்
பிரதேச செயலக பிரிவிற்கு
கோட்டைத் தொகுதியின் சுழி
நீண்ட கால வரலாற்றினையு
யும் கொண்டு இயங்கும் யா
கல்லூரியானது இவ்வாண்டு
ஐம்பதாவது விழாவினை செ
யிட்டு பேருவகை அடைகின்
ஆறுமுக நாவலர் அவர்களி
பட்ட சமய மறுமலர்ச்சி உ
லியார் அவர்களினால் 1876
பாடசாலை” என்னும் நாமத்
இன்று “யா/விக்ரோறியாக் க
இன்று தரம் 06 முதல் உய
ளடக்கி சுமார் 1000ற்கு மேற்
அர்ப்பணிப்பு நிறைந்த ஆசி
பாமதி அவர்கள் தலைமை
டன் இணைபாட விதானச் செ
இயங்கிவருகின்றது. கல்லூ
பாட்ட போட்டி இக் கல்லூரி
பாடசாலை சஞ்சிகையினை
பாடசாலையாகவும் திகழ்கின்
யா/சுழிபுரம் விக்ரோறியாக்
ஆதரவுடன் பாடசாலை வளர்
காலாகாலமாக கடமையாற்
இளம் தலைமுறையினரின்
அவர்களுக்கான கல்விச் செ
மேலும் கல்லூரி வளர்ச்சி
பிரார்த்திப்பதுடன், பாடசால
ளைத் தெரிவித்துக்கொள்கி

அ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# க் கல்லூரி
# சிறப்புமலர்



## டசாலை



. எதிர்கால சந்ததியினருக்கு
ான சிந்தனை, சமூகப் பொறுப்
ாய்ப்புகளை ஏற்படுத்துவதன்
ற குணாம்சங்களைச் செயற்
டுவதில் முக்கியமான பங்கு வகித்துவருகின்றன. அந்த
ரி தொடர்ந்தும் உயரிய கல்வியை ஊக்குவித்து, நமது
க்கு அர்த்தமுள்ள பங்களிப்பை வழங்கிக் கொண்டிருக்கும்
நம்புகிறேன். இந்த முக்கியமான தருணத்தில், இக்கல்லூ
ண்டு நிறைவு விழாவின் வெற்றிக்கும், அதன் தொடர்ச்சி
ற்கும் சுபீட்சத்திற்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத்
றேன்.

கலாநிதி ஹிரிணி அமரசூரிய
பிரதமர்

## மசங்கள் கொண்ட பாடசாலை



ாணப்படுகின்ற 1AB பாடசா
லூரியும் ஒன்றாகும். இப்பா
மான பல அம்சங்களைத்
த பாடசாலையாகும். இப்
றைவு பெற்றுள்ளது.
ாடர்ச்சியாக பலவிதமான
து. அதாவது கல்வி தொடர்
செயற்பாடுகள் தொடர்பாக
பாடுகள் பெரிதும் பாராட்டத்தக்கவையாகும்.
பெற்றுக்கொள்வதற்கு ஆக்கமும் ஊக்கமும் வழங்
பர்கள், பெற்றோர், பாடசாலை அபிவிருத்திச் சங்
அனைவருக்கும் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன்
சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ளவேண்
ளிவர இருக்கின்ற இம்மலரும் சிறப்பாக வெளிவ
நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்

**திருமதி. ஐ. ராஜசீலன்**
வலயக்கல்விப் பணிப்பாளர்,
வலயக்கல்வி அலுவலகம், வலிகாமம்.

## விக்ரோறியாவுக்கு தனியிடம்



ாநாட்டின் வலிமேற்குப்
ரிவிற்கு உட்பட்ட வட்டுக்
பின் சுழிபுரம் கிராமத்தில்
றினையும், வளர்ச்சியை
ங்கும் யா/விக்ரோறியாக்
வ்வாண்டு தனது நூற்று
ினை கொண்டாடுவதை
அடைகின்றேன்.
அவர்களினால் விதைக்கப்
ச்சி உணர்வின் காரணமாக கனகரத்தினம் முத
ால் 1876ஆம் ஆண்டிலே "யா/சுழிபுரம் ஆங்கிலப்
ம் நாமத்துடன் ஆரம்பிக்கப்பட்ட இப் பாடசாலை
றியாக் கல்லூரி" ஆக புகழோங்கி மிளிர்கின்றது.
தல் உயர்தரம் வரையிலான வகுப்புக்களை உள்
ற்கு மேற்பட்ட மாணவர்களையும் கடமையுணர்வு
ந்த ஆசிரியர்களையும் கொண்டு திருமதி க.சுல
லைமையில் மாணவர்களை கல்வி நடவடிக்கையு
தானச் செயற்பாட்டிலும் ஈடுபடுத்தி தலைநிமிர்ந்து
. கல்லூரிகளுக்கிடையிலான முதலாவது துடுப்
ல்லூரி மைதானத்திலேயே இடம்பெற்றுள்ளதுடன்,
கயினையும் 1898 இல் வெளியிட்ட முன்னணி
திகழ்கின்றது.
றியாக் கல்லூரியானது பழைய மாணவர்களின்
லை வளர்ச்சியை தமது குறிக்கோளாகக் கொண்ட,
மையாற்றிய அதிபர்களின் வழிநடத்தலுடனும்
யினரின் கல்வியில் அக்கறையுடன் செயற்பட்டு
ல்விச் செல்வத்தை வழங்கி நூற்றாண்டைக் கடந்து
வளர்ச்சியடைய வேண்டும் என இறைவனைப்
பாடசாலைச் சமூகத்திற்கும் எனது வாழ்த்துக்க
கொள்கின்றேன்.

**திரு.ம.பிரதீபன்**
மாவட்டச் செயலாளர்,
அரசாங்க அதிபர், யாழ்ப்பாண மாவட்டம்.

## விருட்சமாக நிமிரும் விக்ரோறியா



வரலாற்றுச் சிறப்புமிக்க எமது விக்ரோறியாக் கல்லூரி தனது கல்விப் பயணத்தில் 150ஆண்டுகளை நிறைவு செய்து பெரு விழாக்காணும் இந்த உன்னத தருணத்தில் வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியும் பெருமிதமும் அடைகின்றேன்.

1876ஆம் ஆண்டு மிக எளிய முறையில் ஆரம்பிக்கப்பட்ட எமது கல்லூரி இன்று தரம் 6 தொடக்கம் தரம் 13 வரை கலை, வணிகம், விஞ்ஞானம் மற்றும் கணிதம் ஆகிய நான்கு முக்கியமான பிரிவுகளையும் உள்ளடக்கிய ஒரு மாபெரும் கல்வி விருட்சமாக நிமிர்ந்து நிற்கின்றது.

நவீன உலகிற்கு ஏற்ப எமது பாடசாலையின் உட்கட்டமைப்பு வசதிகள் அண்மைக் காலமாகப் பாரிய வளர்ச்சி கண்டுள்ளன. கம்பீரமான புதிய மதில், எழில்மிகு புதிய நுழைவாயில் மற்றும் நவீன கற்றல் வசதிகளைக் கொண்ட புதிய மூன்று மாடிக் கட்டட வகுப்பறைகளென எமது கல்லூரி இன்று புதுப்பொலிவுடன் காட்சியளிக்கிறது. இந்த உன்னத வளர்ச்சிக்கும் கல்விப் பணிக்கும் பின்னணியாக நின்று உழைத்த எமது ஊர் மற்றும் புலம்பெயர் பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக்குழு, பழைய மாணவர் சங்கம், பெற்றோர் மற்றும் நலன் விரும்பிகள், கல்வி சாராப் பணியாளர்கள், கல்வித்திணைக்களம், பிரதேச செயலகம், பிரதேசசபை ஆகியோரின் தொடர்ச்சியான பேராதரவும் அளப்பரிய ஒத்துழைப்பும் எமது கல்லூரிக்குக் கிடைக்கும் பெரும் பாக்கியமாகும். உங்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருமதி. க. சுலபாமதி**
அதிபர்,விக்ரோறியாக் கல்லூரி,சுழிபுரம்

## ஒழுக்கநெறி பேணும் கல்லூரி



எமது கல்லூரி 1876ஆம் ஆண்டு நிறுவப்பெற்று 2026ஆம் ஆண்டு தனது 150வது ஆண்டைப் பூர்த்திசெய்து பெருமதிப்பிற்குரிய கல்லூரியாக விளங்குகின்றதையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

கல்வி, கலாசார, சமய, பண்பாட்டு ஒழுக்க நெறி பேணுகின்ற உன்னத நிலையமாக இக்கல்லூரி திகழ்கின்றது. எமது கல்லூரியில் சேவையாற்றிய அதிபர்கள் ஒருவருக்கு ஒருவர் சளைத்தவர்களில்லை என்ற வகையிலே அவர்களது ஆற்றல், ஊக்கங்கள் மூலம் பௌதீக கற்பித்தல் வளங்களை அபிவிருத்தி செய்து வந்துள்ளார்கள். இத்தொடரில் தற்போதுள்ள அதிபர் எமது கல்லூரி பழைய மாணவி என்ற பெருமையுடன் சிறந்தசேவையாற்றிக் கொண்டிருப்பதைக் காண்கின்றோம். இக்கல்லூரி வைத்திய மேதைகள், கணித மேதைகள், அறிஞர்கள், ஆசிரியர் பெருந்தகைகள், தொழில்நுட்ப வல்லுநர்கள் போன்றோரை உருவாக்கி பெருமதிப்புடன் விளங்குகின்றது. இனிவரும் காலங்களிலும் எமது கல்லூரி நல்ல கல்விமான்களை உருவாக்கி சமூகத்திற்கும், பிரதேசத்திற்கும், நாட்டிற்கும் பெருமை சேர்க்க எல்லாம் வல்ல சிவகாமி சமேத நடராஜப் பெருமானை வணங்குகின்றேன்.

**விக்ரோறியன் திரு. த. சிறிகரன்**
செயலாளர்
கல்லூரி அபிவிருத்தி நிறைவேற்றுக்குழு

## பிரதேச கல்வி வளர்ச்சியில் முக்கியமான தூண்

யாழ்ப்பாண மாவட்டத்தின் வரலாற்றுப் பண்பாடு மற்றும் கல்விச் சிறப்புகளை பெற்று விளங்கும் வலிகாமம் மேற்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட சுழிபுரம் பகுதியிலே அமைந்துள்ள புகழ்பெற்ற பாடசாலைகளில் ஒன்றாக திகழ்ந்து வரும் யா/விக்ரோறியாக் கல்லூரியானது தனது 150 ஆவது ஆண்டு நிறைவினை பெருமையுடனும், மகிழ்ச்சியுடனும் கொண்டாடும் இந்நன்னாளில் வாழ்த்துச் செய்தி வழங்குவதில் வலிகாமம் மேற்கு பிரதேச செயலாளர் என்ற வகையில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

150 ஆண்டுகள் என்பது ஒரு கல்வி நிறுவனத்தின் வயதைக் குறிப்பதற்கான எண்ணிக்கை மட்டும் அல்ல. அர்ப்பணிப்பு, விடாமுயற்சி, சமூகப் பொறுப்பு மற்றும் கல்விப் பணியின் தொடர்ச்சியைக் குறிக்கும் ஒரு வரலாற்றுச் சின்னமாகும்.

பல தலைமுறைகளாக மாணவர்களின் அறிவையும் ஆற்றலையும் வளர்த்து, நல்லொழுக்கம், தலைமைத்துவம் மற்றும் மனிதநேயப் பண்புகளை ஊட்டி, சமூகத்திற்குப் பொறுப்புள்ள குடிமக்களை உருவாக்கி வந்துள்ள இக்கல்லூரி, எமது வலிகாமம் மேற்குப் பிரதேசத்தின் கல்வி வளர்ச்சியில் முக்கிய பங்காற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. ஆகவே இவ்வாண்டு நிறைவு விழாவானது கடந்த கால சாதனைகளை நினைவு கூறுவதற்கான ஒரு சந்தர்ப்பமாக மட்டுமின்றி, எதிர்கால தலைமுறைகளுக்கான புதிய இலக்குகளையும் உயரிய கனவுகளையும் உருவாக்கும் ஒரு ஊக்கியாக அமைவதுடன் கல்வித்தரத்தை மேலும் உயர்த்தி, தொழில்நுட்ப முன்னேற்றங்களுடன் இணைந்து, உலகளாவிய சவால்களுக்கு முகங்கொடுக்கக் கூடிய மாணவர் சமூகத்தை உருவாக்குவதில் இக்கல்லூரி தொடர்ந்து முன்னணி வகிக்க வேண்டும் எனவும் எதிர்பார்க்கின்றேன்.



இவ்விழாவானது சிறப்புற அமையவும், அறிவொளி என்னும் சுடர்விட்டெரியும் விளக்காக யா/விக்ரோறியா கல்லூரி எதிர்காலத்திலும் திகழ்ந்து, மேலும் பல நூற்றாண்டுகள் கல்விப் பணியில் சிறந்து விளங்கவும் எனது மனமார்ந்த ஆசிகளையும் நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திருமதி கவிதா உதயகுமார்**
பிரதேச செயலாளர்,
வலிகாமம் மேற்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

குருதிப் பரிசோதனைக்கு அதிக கட்டணம்

# தனியார் மருத்துவமனைக்கு 30 லட்சம் ரூபா அபராதம்!

யாழ்ப்பாணம், ஜூலை 24
யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் மருத்துவமனையொன்று குருதிப் பரிசோதனைகளுக்காக அதிகளவு கட்டணம் வசூலித்த நிலையில், அந்த மருத்துவமனைக்கு யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தால் 30 லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.
பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைக்கு கிடைத்த முறைப்பாட்டுக்கு அமைய இடம்பெற்ற சோதனை நடவடிக்கையின் போது இந்த விதிமீறல் கண்டறியப்பட்டது. இதுதொடர்பில் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் வழக்கும் தொடரப்பட்ட நிலையில் அந்த வழக்கு நேற்று விசாரணைக்காக எடுக்கப்பட்டது. மருத்துவமனை நிர்வாகம் தனது குற்றத்தை ஒப்புக்கொண்ட நிலையில் நீதிமன்றத்தால் 30 லட்சம் ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டது. (அ-ம-66-26)

## மரதன் ஓட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 24
அரியாலை திருமகள் சனசமூக நிலையத்தின் பவளவிழாவை முன்னிட்டு, உள்ளூர் மற்றும் யாழ்.மாவட்ட ரீதியிலான மரதன் ஓட்டப்போட்டி நாளை சனிக் கிழமை நிலைய முன்றலில் இடம்பெறும். (க)

## பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கத்தின் 30ஆவது ஆண்டுப் பொதுக் கூட்டமும், நிர்வாகத் தெரிவும் சங்கத்தில் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு சங்கத் தலைவர் கி.ரவிக்குமார் தலைமையில் நடைபெறவுள்ளது. (க-25)

# இலவச கண் மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம், ஜூலை 24
அச்சுவேலி மத்திய சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில், இலவச கண் மருத்துவ முகாம் நாளை சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் நண்பகல் ஒரு மணி வரை, அச்சுவேலி மத்திய சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.
சர்வதேச மருத்துவ சுகாதார அமைப்பினரின் அனுசரணையில், கண் மருத்துவ நிபுணர்களின் பங்குபற்றுதலுடன் இந்த மருத்துவ முகாம் இடம்பெறவுள்ளது. (ச)

# 16ஆம் ஆண்டு நினைவஞ்சலி




## அமரர் வல்லிபுரம் கணேசலிங்கம்

(உரிமையாளர் எரிக்கணேஷ் பல்மூக்குக் கண்ணாடியகம்)

**திதி : ஆடிமாதம் வளர்பிறை ஏகாதசி (24.07.2026)**

அப்பா என்றழைத்த எம் தெய்வமே !
ஆண்டுகள் பதினாறு ஓடி மறைந்தாலும்
ஆறிடுமோ எங்கள் துயரம் - அப்பா
உங்கள் மெய்யை விட்டு உயிர் பிரிந்து
இன்று பதினாறு ஆண்டுகள் ஆனதப்பா - நாங்கள்
கண்கலங்கி வாடுகின்றோம் அப்பா
எங்கள் நெஞ்சில் உங்கள் நினைவுகள்
நிதம் நிதம் வந்து எங்கள் வாழ்வை வழிநடத்துகிறது
உங்களுடன் வாழ்ந்த கால நினைவுகள்
உங்கள் பொன்மொழியும் புன் சிரிப்பும்
குறுங்கதையும் கண்முன் நிழலாடுதப்பா !
உங்கள் ஆசியுடன் உங்களை நினைத்து
நித்தம் எம் பணியைத் தொடருகின்றோம்.
என்றும் உங்கள் நினைவுகளைச் சுமந்து வாழ்கிறோம் அப்பா

**மனைவி**
**பிள்ளைகள், சகோதரர்கள்**

**பொன்னையா ஒழுங்கை,**
**ஆனைக்கோட்டை.**

(CS/61940) J-1

# ஆதனப்பெயர்மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம் - 24, பருத்தித்துறை வீதி 2ம் ஒழுங்கை, இல.36 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் உரிமையாளர் செல்லையா பெண் செல்லம்மா என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த நில.பர 01 குளி 17 விஸ்தீரணம் கொண்ட ஆதனத்தை, வண்ணார்பண்ணை கிழக்கைச் சேர்ந்த அப்பையா சிதம்பரநாதர் சுந்தரமூர்த்தி 27.05.1940 திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு கந்தவனம் ஐயாத்துரை முகதாவில் 4924ம் இலக்க அறுதி உறுதி மூலம் அவ்வூர் செல்லையா மகள் புனேஸ்வரிக்கும் செல்லையா மகள் பரமேஸ்வரிக்கும் அறுதியாக விற்றுள்ளார்.

மேற்படி ஆதனம், ஸ்ரேஷன் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவரும் இல.13/28, நவகம்புர, ஸ்ராக் வீதி, கிராண்ட்பாஸ், கொழும்பு. 14ல் வசிப்பவருமான குணரத்தினம் செல்வராஜ் என்பவர் 29.10.2001 திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு விஜிதா மீகாவத்த முகதாவில் 644ம் இலக்க வெளிப்படுத்தி உறுதிப் படுத்தல் உறுதி மூலம், குறித்த ஆதனத்தில் தெற்குப்பக்கமாக நில.பர குளி 17.56 விஸ்தீரணம் கொண்ட ஆதனம் தனது தாயாரான காலஞ்சென்ற செல்லையாவின் மகளான குணரட்ணம் மனைவி பரமேஸ்வரியின் நீண்டகால தங்குதடையற்ற நிந்தப்பிரிவிடல் செய்யப்பட்ட உரித்தான ஆதனமென்றும், அவர் உயில் எழுதாமல் நிர்வாக மதிப்புக்குக் குறைவான சொத்துக்களை விட்டுச்சென்றார் என்றும், 'தனது சகோதரிகளுக்கு ஏற்கனவே வரதட்சணை வழங்கப்பட்டது என்றும் தனது சகோதரனும் ஆதன உரித்தினை துறந்துள்ளார் என்றும் குறிப்பிட்டு குறித்த ஆதனம் தனக்கே உரித்தானது என்று வெளிப் படுத்தி உறுதிப்படுத்தல் உறுதியினை நிறைவேற்றியுள்ளார்.

குறித்த ஆதனத்தை, குணரட்ணம் செல்வராஜ், குனரத்தினம் மகேந்திரன் மற்றும் கிருஷ்ணபிள்ளை பாஸ்கரனும் பெண் சந்திராதேவியும் ஆகியோர் 10.02.2004 திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு கனகரத்தினம் கேசவன் முகதாவில் 7156ம் இலக்க அறுதி உறுதி மூலம் சரவணை கணேந்திரனும் பெண் சித்திராதேவிக்கும் அறுதியாக விற்றுள்ளனர்.

ஆதன அட்டவணை
வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி, வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை தென்கிழக்கு இறை.
"குருந்தடி" நில. பர.1 குளி 17 1/8 இது 1939.11.15ம் திகதி உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் திரு.கே.டி.வீரசிங்கம் அவர்களால் அளந்து வரைந்த 1474ம் இலக்கப் படத்தில் சுட்டிய 02ம் இலக்கத் துண்டு இதில் தெற்குப் பக்கமாக நில.பர 0 குளி 17.56 பதினேழு தசம் ஐந்து ஆறும் வீடும், குறித்த படத்தில் சுட்டிய 4ம் இலக்கத் துண்டுக்குள்ளிருக்கும் கிணற்றின் பங்கும் வழமையான வழி வாய்க்கால் பாவிப் புரித்தும் துர்வை நிலத்தில் பங்கும், குறித்த படத்தில் சுட்டிய 1ம் இலக்கத் துண்டான பாதையில் இதற்குரிய பங்கும். **இதற்கு எல்லைகள்:**
கிழக்கு :- குறித்த படத்தில் சுட்டிய 3ம் இலக்கத் துண்டு.
வடக்கு :- செல்லையா மகள் புவனேஸ்வரியின் உரிமைக்காரரின் ஆதனமும் 3 அடி அகலப் பாதை முகப்பும்
மேற்கும் தெற்கும் :- திருநாவுக்கரசு பெண் மாணிக்கத்தின் உரிமைக்காரருக்கும் மறு பேருக்குமுரிய ஆதனம் இதடங்கலும்.

தற்போது, இவ்வாதனத்தை சரவணை கணேந்திரனும் பெண் சித்திராதேவியும் தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ்வாதனத்திற்கு உரிமைகோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒருமாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமைகோராவிடத்து குறித்த ஆதனமானது சரவணை கணேந்திரனும் பெண் சித்திராதேவியும் என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப் பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தருகின்றேன்.

**மாநகர முதல்வர்,**
**யாழ் மாநகர சபை.**

(cr 46812) N

# மரண அறிவித்தல்




## சாமிநாதன் ராஜ்மீனன்

இணுவில் மஞ்சத்தடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சாமிநாதன் ராஜ்மீனன் அவர்கள் 22.07.2026 புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.
அன்னார் சாமிநாதன் காலஞ்சென்ற தவமலர் தம்பதியரின் அன்பு மகனும், துஸ்யந்தன் (பிரான்ஸ்), ஜிந்துஜா (பிரான்ஸ்), சர்மிலன், சாருஜா, கஜமுகன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சங்கீரணி, ஜெயரூபன், கீர்த்தனா, கரிகரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், கரிஸ்டன், அத்விகா, கரிகாலன், நித்தேஸ், மானஷா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.07.2026) வெள்ளிக் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 61938) N-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## மன்னாரின்
# வெள்ளக் கட்டுப்பாட்டுக்காக 12 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு

மன்னார்,ஜூலை 24

**மன்னார் மாவட்டத்தில் வெள்ளக்கட்டுப்பாட்டுத் திட்டத்துக்காக, தற்காலிக மதிப்பீடாக, சுமார் 12 கோடி ரூபா நிதி ஒதுக்கீட்டுக்கு, அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது என்று வலுசக்தி பிரதி அமைச்சர் எம்.ஐ.எம்.அர்கம் தெரிவித்துள்ளார். மன்னார் மாவட்டத்தின் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடலில் அவர் இதனைத் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், வெள்ளக்கட்டுப்பாடு தொடர்பான பணிகள் தாழ்நிலப்பகுதி அபிவிருத்தி அதிகாரசபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இன்னும் சில மாதங்களுக்குள் இதுதொடர்பான அறிக்கை கிடைத்தவுடன், அடுத்த கட்டப் பணிகளைத் தொடரமுடியும். அதேவேளை மன்னார் பிராந்தியத்தில் பல்வேறு திட்டங்களை செயற்படுத்தும் நிறுவனங்கள், மக்களுக்குத் தொடர்ச்சியாக வாழ்வாதார உதவித்திட்டங்களை வழங்க உடன்பட்டுள்ளன. ஆண்டுதோறும் இவ்வாறு திட்டங்களைச் செயற்படுத்துவதற்கான அனுமதி கிடைத்துள்ளது.


இவற்றை மன்னார் நகரசபைத் தலைவர் மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவினருடன் இணைந்து முன்னெடுப்பதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. அதேவேளை மன்னார்த்தீவில் சில முக்கியமான மின்சக்தித் திட்டங்கள் செயற்பாட்டில் உள்ளன. தம்பபவணி காற்றாலை மின் உற்பத்தித் திட்டம் செயற்பாட்டில் உள்ளது. 20 மெகாவாட் திறனுடைய மின் உற்பத்தித் திட்டம் தற்போது இயங்கி வருகின்றது. 50 மெகாவாட் திறனுடைய மற்றொரு திட்டத்தின் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அரசாங்கத்தின் அமைச்சரவைத் தீர்மானத்தின் படி, வெள்ளப் பெருக்கைக் கட்டுப்படுத்தும் திட்ட அறிக்கை மற்றும் பணிகள் முழுமையாக ஆரம்பிக்கப்படும் வரை, மன்னார்த் தீவுக்குள் புதிய திட்டங்களை ஆரம்பிப்பது தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. இருப்பினும், மன்னார்த் தீவுக்கு வெளியேயான கொண்டாச்சி, முள்ளிக்குளம் போன்ற பகுதிகளில் புதிய திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுவருகின்றன- என்றார். (க-56)

## பருத்தித்துறை அஞ்சல் நிலையத்துக்கு புதிய கட்டடம் அமைக்கக் கோரிக்கை!

பருத்தித்துறை,ஜூலை 24

பருத்தித்துறை அஞ்சல் நிலையத்துக்கு, நிரந்தரக் காணியை வழங்கி, புதிய கட்டடம் அமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், வெகுஜன ஊடகப் பிரதி அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளார். குறித்த அஞ்சல் நிலையம் கடந்த 41 ஆண்டுகளாக, அடிப்படை வசதிகளில்லாது, பழைய வாடகைக் கட்டடத்தில் இயங்கிவருகின்றது. வடபகுதி மக்களின் அன்றாட நிர்வாக, நிதி மற்றும் அஞ்சல் தேவைகளைப் பூர்த்திசெய்யும் மிக முக்கியமான அரச நிறுவனமாக இது திகழ்கின்றது. இருப்பினும், இடவசதியின்மை மற்றும் கட்டமைப்பு வசதிகள் சீரின்மையால், பொதுமக்களுக்கு வினைத்திறனான சேவைகளை வழங்கமுடியாதுள்ளது. குறித்த அஞ்சல் நிலையத்துக்குச் சொந்தமான காணியும், கட்டடமும் நீண்டகாலமாகப் பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாட்டில் இருந்தன. 2012ஆம் ஆண்டளவில் அதன் ஒரு பகுதி அஞ்சல் திணைக்களத்துக்கு விடுவிக்கப்பட்டபோதிலும், மீதமுள்ள பகுதி இன்னும் படையினர் வசமே உள்ளது. விடுவிக்கப்பட்ட அந்தப் பகுதியில் புதிய நிரந்தரக் கட்டடத்தை நிர்மாணிப்பதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்டன. எனினும் அவை முடிவுறுத்தப்படவில்லை. எனவே குறித்த அஞ்சல் நிலையத்தின் நீண்டகாலப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில், ஒதுக்கப்பட்ட காணியில் புதிய நிரந்தரக் கட்டடத்தை விரைவாக நிர்மாணிப்பதற்கு, உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (க-246)




## கொன்சால்வேஸ் வெற்றிக்கிண்ண உதைபந்தாட்டம் அடுத்த வாரம்!

கிளிநொச்சி,ஜூலை 24

வலைப்பாடு புனித அன்னம்மாள் ஆலயத் திரு விழாவை முன்னிட்டு, பூநகரி உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் அனுமதியுடன், வலைப்பாடு ஜெகமீட்பர் விளையாட்டுக் கழகம் நடத்தும், அருட்பணி கொண்சால்வேஸ் வெற்றிக்கிண்ண உதைபந்தாட்டத் தொடர் அடுத்த வாரம் ஆரம்பமாகவுள்ளது. இதில் பூநகரி உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் அங்கத்துவக் கழகங்களைப் பங்குபற்றுமாறு ஜெகமீட்பர் விளையாட்டுக்கழகத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர். நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் 29ஆம் திகதி வரை நடைபெறவுள்ள போட்டிக்கு இன்று வெள்ளிக்கிழமைக்கு முன்னதாக 0769990801, 0775971817 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு பதிவுகளை மேற்கொள்ளமுடியும் என்று விளையாட்டுக்கழகத்தினர் தெரிவித்துள்ளணர். (க)



## 100ஆவது பிறந்தநாளில் பாடசாலைக்கு உதவி

யாழ்ப்பாணம்,ஜூலை 24

திருமதி க.சின்னப்பிள்ளையின் நூறாவது பிறந்த நாளை முன்னிட்டு, இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலய மாணவர்களின் கல்வித்தேவைக்காக, ஒரு தொகுதி கதிரைகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன. பாடசாலையின் அபிவிருத்திச்சங்க உறுப்பினர் திருமதி ச.மயூரிக்காவின் அம்மம்மாவின் நூறாவது பிறந்தநாளை முன்னிட்டு, அவரது குடும்பத்தினரால் 125 பிளாஸ்ரிக் கதிரைகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன. (க-159)

## வெற்றிக்கிண்ணத்தை வென்றது வட்டுவாகல்

முல்லைத்தீவு,ஜூலை 24

கள்ளப்பாடு உதயம் அணியினர் நடத்திய ஆழிப் பேரலை உதைபந்தாட்ட இறுதிப்போட்டியில், வட்டுவாகல் உதயசூரியன் விளையாட்டுக்கழகம் வெற்றிக்கிண்ணத்தை வென்றது. கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இறுதிப்போட்டியில் இளந்தென்றல் அணியுடனான பலப்பரீட்சையின்போது 1:0 என்ற கோல்கணக்கில் வட்டுவாகல் அணி வெற்றி பெற்றது. இறுதிப் போட்டியின் ஆட்ட நாயகனாக ச.சுஜிகரன், தொடர் ஆட்டநாயகனாக இன்சாத், பின்கள வீரராக தீபன், சிறந்த கோல் காப்பாளராக சுகிர்தன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். (க-246)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கல்லுண்டாய் தீப்பரவலுக்கு விரைவில் முற்றுப்புள்ளி!

யாழ்ப்பாணம், ஜூலை 24
கல்லுண்டாய் குப்பைமேடு அடிக்கடி தீப்பற்றுவதன் பின்னணியில் விஷமிகளின் சதி இருக்கலாம் என்று நாங்கள் சந்தேகிக்கின்றோம். இந்தப் பிரச்சினைக்கு விரைவில் முற்றுப்புள்ளி வைக்கப்படும் இவ்வாறு யாழ்ப்பாணம் மாநகரசபையின் சுகாதாரக் குழுத்தலைவர் சாரூபன் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:

யாழ்ப்பாணம் மாநகரசபையால் நிர்வகிக்கப்படும் குப்பைமேடுகள் தொடர்பில் அண்மைக்காலமாக பல கருத்துக்கள் திரிவுபடுத்தப்பட்டு பரவ விடப்படுகின்றன. எனவே, இந்த விடயம் தொடர்பில் மக்களுக்கு உண்மையை விளக்க வேண்டிய பொறுப்பு எமக்கு உள்ளது.

யாழ்ப்பாணம் மாநகரசபையால் நிர்வகிக்கப்படும் கழிவகற்றும் மையங்களில் இதற்கு முன்னர் 40 தொடக்கம் 50 வரையான உழவு இயந்திரங்களே கழிவகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டன. தற்போது 101 உழவு இயந்திரங்களில் ஒவ்வொரு நாளும் கழிவுகள் அகற்றப்பட்டு வருகின்றன. எனவே கழிவகற்றும் செயற்பாடு தற்போது இரண்டு மடங்காக அதிகரித்துள்ளது. இது மிகப்பெரும் சவாலாகவும் உள்ளது. கல்லுண்டாய் கழிவகற்றும் மையத்தில் தற்போது சில நடைமுறைகள் புதிதாக அமுலுக்கு வந்துள்ளன. அத்துடன் கண்காணிப்புப் பணிகளும் தீவிரமாகியுள்ளன. இதற்குப் பின்னர் அங்கு சில நாள்களாக தீப்பரவல்கள் இடம்பெறவில்லை. கல்லுண்டாய் பகுதியில் கண்காணிப்புக் கமராக்களும், மின்விளக்குகளும் விரைவில் பொருத்தப்படும். எனவே, கல்லுண்டாயில் இடம்பெறும் தீப்பரவலை நாம் முற்றாகக் கட்டுக்குள் கொண்டுவருவோம். கல்லுண்டாயில் ஏற்படும் தீப்பரவல்கள் நண்பகல் வேளையில் ஏற்படுவதில்லை. தற்போதுள்ள வெப்பநிலை காரணமாக லைட்டர்கள், மின்கலன்கள் மற்றும் சில எரியக்கூடிய, வெடிக்கக்கூடிய பொருள்களால் தீப்பரவல் ஏற்படும் சாத்தியம் உள்ள போதிலும், கூடுதலாக இரவு 10 மணிக்கு பிறகுதான் எரிவதற்கு ஆரம்பிக்கின்றன. எனவே இந்த விடயத்தில் எமக்கு வலுவான சந்தேகம் உள்ளது - என்றார். (ம-26)



**INVITATION FOR BID 2026**
**OFFICE OF THE REGIONAL ASSISTANT COMMISSIONER OF LOCAL GOVERNMENT.**

1. **The Chairman, Regional Procurement Committee**, on behalf of the **Regional Assistant Commissioner , Office of the Regional Assistant Commissioner of Local Government , Sivan Pannai Road, Jaffna** invites sealed bids from eligible and qualified bidders for the Construction work described in the table below. All the relevant details are described in the same table.
2. Bidding will be conducted through National Competitive Bidding (NCB)
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of highway for grade mentioned in the table below.
**"Bidders shall also register themselves with the Registrar of Public Contracts Sri Lanka, in terms of the public Contract Act No 03. Of 1987 if the estimated cost exceeds Rs.5 million,"**
4. Qualification's requirements are indicated in section 4 of the Procurement document. Additional details are provided in the Bidding data & Contract Data (Section 5) for SBD 1 Documents.
5. Interested bidders may obtain further information from address given below in 6 and inspect the Procurement documents at the same place on any working days from 24/07/2026 to 06/08/2026 during 09:00 hrs and 15:00 hrs.
6. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application,
**For Reconstruction of Kavil kirai Road- The Chairman, Vadamaradchy South West Pradeshiya Sabha, Karaveddy (T.P:021 2263271, email:vadaswps@gmail.com and For Reconstruction of Murugaiya Veethy at Velanai - The Chairman, Velanai Pradeshiya Sabha , Velanai (T.P:021 2210180, email: velanaips@gmail.com) from 9:00 hrs to 15:00 hrs during the period stated in table below upon payment of non-refundable fees as mentioned in the table below.** The method of payment will be by cash.
7. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the **Chairman, Regional Procurement Committee , Office of the Regional Assistant Commissioner of Local Government , Sivan Pannai Road, Jaffna on or before 10:30:00 AM as stated in table below**. Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
8. Pre-Bid Conference will be held at the respective Local Authorities as stated in table below.
9. Bids shall be accompanied by a Bid security/ Refundable cash Deposit/ Bank Draft as per the information given in the Tables.

| | | |
|---|---|---|
| | Document Issuing/Purchasing Period | From 24/07/2026 To 06/08/2026 |
| | Pre-Bid Conference – Vada. South West PS. | At 10:30:00 AM on 30/07/2026 |
| | – Velanai PS. | At 03:00:00 PM on 30/07/2026 |
| | Closing and Opening of Bids | At 10:30:00 AM on 07/08/2026 |

| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Grade Required | Non-Refundable Fee (Rs.) | Required Bid Security/ Bank Draft/ Security Deposit | | Bid Validity Period |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Security Amount (Rs.) | Validity Period | |
| RE.BU IN SL / NP/JAF/VASWPS/2026/01 | Reconstruction of Kavil kirai Road | 23.36 | 105 | C6, C5and C4 (Highway) | 6,500.00 | 234,000.00 | 20/11/2026 | 77Days |
| RE.BU IN SL / NP/JAF/VPS /2026/01 | Reconstruction of Murugaiya Veethy at Velanai | 22.64 | 105 | C6, C5 and C4 (Highway) | 6,500.00 | 227,000.00 | 20/11/2026 | 77Days |

Chairman
Regional Procurement Committee,
Office of the Regional Assistant Commissioner of Local Government,
Sivan Pannai Road, Jaffna.
Date – 24.07.2026




# நல்லூர் சங்கிலியன் பூங்காவில் பனைசார் உற்பத்திக் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஜூலை 24
'பனை வளம் - நிலையான வாழ்வின் பலம்' என்ற தொனிப்பொருளில் பனைசார் உற்பத்திப் பொருள்களின் கண்காட்சியும், விற்பனையும் நல்லூர் முத்திரைச்சந்தியில் அமைந்துள்ள சங்கிலியன் பூங்காவில் கடந்த புதன்கிழமை கோலாகலமாக ஆரம்பமானது.

இந்தக் கண்காட்சியை நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை வரை தினமும் காலை 9 மணி முதல் இரவு 8 மணி வரை பொதுமக்கள் பார்வையிட முடியும்.

வடக்கு மாகாணத்தின் 5 மாவட்டங்களைச் சேர்ந்த உற்பத்தியாளர்கள் பனை மரத்திலிருந்து தயாரிக்கப்படும் பல்வேறு தரமான உணவுப் பொருள்கள், கைவினைப் பொருள்கள் மற்றும் மதிப்புக் கூட்டப்பட்ட உற்பத்திகளை இந்தக் கண்காட்சியில் காட்சிப்படுத்தியுள்ளனர். வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் ஆண்டு தோறும் ஜூலை மாதத்தில் 'பனை வாரம்' அனுசரிக்கப்படுகின்றது.

பனை வளத்தைப் பாதுகாத்தல், பனைசார் உற்பத்திப் பொருள்களின் பயன்பாட்டை விரிவுபடுத்துதல் மற்றும் அவற்றின் சந்தைப்படுத்தலை வலுப்படுத்துதல் ஆகிய நோக்கங்களுடன் பனை விதை நடுதல், பனைசார் உற்பத்திப் போட்டிகள், பாடசாலை மாணவர்களுக்கான ஓவியப் போட்டிகள், 'தாலம்' சஞ்சிகை வெளியீடு, கலைநிகழ்வுகள் உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகள், வடக்கு மாகாண பனை மற்றும் தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் ஒத்துழைப்புடன் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-25)

# வாகனங்களுக்கான புகைப்பரிசோதனை

யாழ்ப்பாணம், ஜூலை 24
வாகனங்களுக்கான புகைப்பரிசோதனை இன்று வெள்ளிக்கிழமை, நெடுந்தீவு பிரதேச செயலக வளாகத்தில் காலை 6 மணி தொடக்கம் இடம்பெறவுள்ளது. (க-25)

# யாழ். நகரில் இன்று விபுலானந்தர் ஊர்தி

யாழ்ப்பாணம், ஜூலை 24
யாழ்ப்பாணம் மாவட்டச் செயலக அரச கருமமொழித் திணைக்களம், யாழ்ப்பாணம் பல்கலைக் கழகம் என்பன இணைந்து தமிழ்மொழிதினக் கொண்டாட்டத்தையும், சுவாமி விபுலானந்தர் ஊர்திப் பவனியையும் இன்று முன்னெடுக்கவுள்ளன.

இந்தப் பண்பாட்டு ஊர்தி யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரிக்கு முன்பாக காலை 8 மணிக்கு ஆரம்பித்து யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தில் நிறைவடையவுள்ளது. இந்த ஊர்தியை வரவேற்கும் வகையிலான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் உள்ள வணிகர்களுக்கு யாழ். வணிகர் கழகம் அறிவுறுத்தல் வழங்கியுள்ளது. (ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிற்போனது நூல்வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூலை 24
நாளை சனிக்கிழமை நடைபெற விருந்த 'தம்பியைப் பேசவிடுங்க' நூல் வெளியீடு தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது.
நூல் வெளியீடு தொடர்பான புதிய திகதி விரைவில் அறிவிக்கப்படும் என்று ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்துள்ளனர். (ம-26)

## புலம்பெயர்...

கறுப்பு ஜூலைக் கலவரத்தில் படுகொலை செய்யப்பட்டோருக்கு நீதி கோரியும், செம்மணி மனிதப் புதைகுழிக்கு சர்வதேச விசாரணையை வலியுறுத்தியும் பிரிட்டன், கனடா உள்ளிட்ட புலம்பெயர் தேசங்களில் நேற்றுப் போராட்டம் இடம்பெற்றது.
பிரிட்டன் பிரதமர் அலுவலகத்துக்கு முன்பாக இடம்பெற்ற இந்தப் போராட்டம் பெரும் எழுச்சியுடன் இடம்பெற்றது. இதில் நூற்றுக் கணக்கான மக்கள் கலந்துகொண்டனர்.
கறுப்பு ஜூலைக் கலவரங்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும். அதுபோல் சிங்கள பேரினவாத அரசாங்கத்தின் இனப்படுகொலைக்கு எதிராகவும், செம்மணிப் புதைகுழி தொடர்பிலும் மிக விரைவில் சர்வதேச விசாரணைகள் இடம்பெற வேண்டும். அத்தகைய விசாரணைக்காக நாங்கள் தொடர்ந்து குரல்கொடுப்போம் என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். (அ-ம)

## நாடாளுமன்றில்...

கத்தில் நடைபெற்றது. இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைவர் உள்ளிட்ட தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இணைந்து இந்த அஞ்சலி நிகழ்வில் பங்கெடுத்தனர். (அ-ம)

## காங்கேசன்...

பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எஸ்.எம்.மரிக்கார் மேலும் தெரிவித்ததாவது:-
காங்கேசன்துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதற்காக இந்தியா நிதியுதவி வழங்கியுள்ளது. ஆனால் அதனை ஏற்றுச் செயற்படுத்துவதற்குத் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அஞ்சுகின்றது. நாம் தற்போது எதிர்க்கட்சியில் இருந்தாலும், நாட்டுக்கு நன்மை பயக்கும் இந்தியத் திட்டங்களை எதிர்க்க மாட்டோம். எனவே, அரசாங்கம் எவ்வித அச்சமுமின்றி, காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தித் திட்டத்தை இந்தியாவிடம் ஒப்படைக்கலாம்.
இந்திய உதவியைப் பெற்று இந்தத் துறைமுகத்தைக் கட்டியெழுப்பினால் வடக்கின் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படும்;. அத்துடன் புலம்பெயர் தமிழ் முதலீட்டாளர்களும் வடக்கிலேயே முதலீடு செய்வார்கள். அதுமட்டுமன்றி, தென்னிந்திய சந்தையை நாம் சுலபமாக அணுகக்கூடிய வாய்ப்பும் ஏற்படும். குறிப்பிட்ட காலத்துக்கு இந்தியா அந்தத் துறைமுகத்தை நிர்வகித்த பின்னர், அது முழுமையாக எமது நாட்டுக்கே உரித்தாகும்;. அதனை இந்தியா எடுத்துச் செல்லப் போவதில்லை.
இந்திய ஒத்துழைப்பின்றி பிராந்தியத்தில் எம்மால் முன்னோக்கிச் செல்ல முடியாது. பொருளாதார நெருக்கடி ஏற்பட்டபோது அந்தநாடே முதன்மையாக வந்து உதவிகளை வழங்கியதுடன், வெளிநாட்டுக் கடன்களுக்காக இலங்கை சார்பில் பிணைநின்றது. இந்தியாவின் உதவிகளை நாங்கள் எக்காலத்திலும் மறந்துவிட முடியாது - என்றார். (அ-ம-125)

## குற்றங்கள்...

செம்மணிப் புதைகுழி தொடர்பான வழக்கு நேற்றையதினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. இதன்போதே குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் இவ்வாறாகச் சமர்ப்பணம் செய்யப்பட்டது.
இதேவேளை இதுவரை மீட்கப்பட்ட சான்றுப்பொருள்கள் தொடர்பான அறிக்கையை பேராசிரியர் ராஜ் சோமதேவவிடம் இருந்து பெற்றுக்கொள்வது என்றும், குழுவொன்று அமைத்து எதிர்காலத்தில் எவ்வாறான பரிசோதனைகளை மேற்கொள்வது என எதிர்வரும் 5ஆம் திகதி வழக்கு மீள அழைக்கப்படும் போது தீர்மானிப்பது என்றும் முடிவெடுக்கப்பட்டது.
அத்துடன், செம்மணிப் புதைகுழி தொடர்பான மண்மாதிரிப் பரிசோதனை அறிக்கை இதுவரை கிடைக்காத நிலையில் அந்த அறிக்கையை விரைவாகப் பெற்றுக்கொள்வதற்கும் நீதிமன்று உரிய அதிகாரிகளுக்கு கட்டளை வழங்கியுள்ளது.
இந்த வழக்கில் காணாமற்போனோர் குடும்பங்கள் சார்பில் சட்டத்தரணிகளான வி.எஸ்.நிரஞ்சன் மற்றும் ஞா.ரணித்தா ஆகியோரும், காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தின் ஆணையாளர்களில் ஒருவரான மிராஜ் ரஹீம் மற்றும் யாழ்ப்பாண நீதிமன்ற சட்டத்தரணிகளும், நல்லூர் பிரதேசசபையின் சட்டத்தரணியும் நீதிமன்றத்தில் முன்னிலையாகியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## ஒன்பது...

யில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 9 இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டனர்.
தலைமன்னாருக்கு வடக்கே கண்காணிப்புப் பணியில் ஈடுபட்ட கடற்படையாலேயே இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. கைது செய்யப்பட்ட ஒன்பது மீனவர்களும் மன்னார்மீன்பிடித்திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டு மன்னார் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர். இதன் போது அவர்கள் அனைவரையும் எதிர்வரும் 6ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (அ-ம-26)

## சட்டவிரோத...

தொடரப்பட்டுள்ளது. கன்னியாய் வெந்நீரூற்று பிள்ளையார் ஆலய ஆதினகர்த்தா சபையால் இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பான சமர்ப்பணங்களை ஆராய்ந்த நீதிபதி குறித்த வழக்கில் எதிரிகளாக குறிப்பிடப்பட்டுள்ள தொல்பொருள் திணைக்கள பணிப்பாளர் நாயகம் மற்றும் திருகோணமலை மாவட்டச் செயலர் ஆகிய தரப்பினருக்கு நீதிமன்ற அழைப்பு அறிவித்தலை அனுப்புமாறு பதிவாளருக்கு உத்தரவிட்டார். அத்துடன், ஓகஸ்ட் மாதம் 3ஆம் திகதிக்கு வழக்கை விசாரணைக்கு எடுக்கவும் நீதிபதி தீர்மானித்துள்ளார்.
கன்னியாபிள்ளையார் ஆலயம் தொடர்பில் 2019ஆம் ஆண்டு வழக்கொன்று நடைபெற்றது. இதன்போது, குறித்த பகுதியில் புதிதாக எந்தக் கட்டுமானங்களும் அமைப்பதற்கு நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-50)

## திஸ்ஸ...

வித்தார். யாழ்ப்பாணத்துக்கு நேற்றுப் பயணம் மேற்கொண்ட அமைச்சர் பல்வேறு நிகழ்வுகளில் பங்கெடுத்தார். மருதனார்மடத்தில் வீதியொன்றின் பெயர்ப் பலகையைத் திரைநீக்கம் செய்தபின்னர் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
தையிட்டி விகாரை தொடர்பில் அரசாங்கம் அனைத்து தரப்பினரையும் அழைத்து விரிவான கலந்துரையாடல் மேற்கொண்டுள்ளது. இந்தக் கலந்துரையாடல்களின் அடுத்த கட்டமாக அங்கு நிலஅளவை செய்வதற்கு நடவடிக்கை எடுத்தோம். ஆனால், சிறியதொரு பிரச்சினை காரணமாக அதைச் செய்யமுடியாமல் போனது. எமது அரசாங்கத்தின் நோக்கம் இந்தப் பிரச்சினையை விரைவாக முடித்துவைத்து காணிகளை அவற்றின் உரிமையாளர்களுக்கு வழங்குவதாகும்.
அதேவேளை 1972ஆம் ஆண்டின் நில அளவைப் படமொன்றில் இந்த விகாரை பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே விகாரைக்குச் சொந்தமான காணியை விகாரைக்கு வழங்கிவிட்டு, ஏனையவற்றை மக்களுக்கு வழங்குவதற்கு உரிய நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. அதன் அடிப்படையில் மக்களுக்குச் சொந்தமான காணிகள் மக்களுக்குச் சென்றடைய வேண்டும். விகாரைக்குச் சொந்தமான காணி விகாரைக்குச் சென்றடைய வேண்டும். அது தொடர்பில் எதிர்வரும் 2 வாரங்களுக்குள் முதற்கட்ட தீர்மானத்தை எடுக்க முடியும் என நினைக்கிறேன். அதன் பிறகு, முறையான நில அளவை செய்து, அவரவர் காணிகளைப் பிரித்து, ஒப்படைப்பதே எமது நோக்கமாகும் - என்றார். (அ-ம-26)

## மழைக்கால...

செம்மணி மனித புதைகுழியில் மூன்றாம்கட்ட அகழ்வு பணிகளின் 41ஆம் நாள் நடவடிக்கைகள் நேற்று இடம்பெற்றன. இதன்போதே, மழை அங்கியை ஒத்த அங்கியுடனும் காலில் காலுறையுடனும் சிறுவரின் என்புக்கூடு அடையாளம் காணப்பட்டுள்ளது.
இதேவேளை நேற்றையதினம் மேலும் 7 என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டதுடன், 9 என்புத் தொகுதிகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. இதன்படி செம்மணிப் புதைகுழிக்குள் இருந்து இதுவரை 478 என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டதுடன், 464 என்புத் தொகுதிகள் முற்றாக மீட்கப்பட்டுள்ளன. இதேவேளை, செம்மணிப் புதைகுழிக்குள் இருந்து நேற்று ஆணிகள், சிமெந்துத் துண்டுகள் என்பனவும் சான்றுப் பொருள்களாக மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## நம்பிக்கையில்லாப்...

யில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதன்போதே, நீதியமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீது இன்றையதினம் விவாதமும் வாக்கெடுப்பும் நடத்துவது எனத் தீர்மானிக்கப் பட்டது.
நீர்கொழும்பு சிறைச்சாலையில் அண்மையில் இடம்பெற்ற கலவரத்தை அடிப்படையாகக் கொண்டே இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்டது. 10 குற்றச்சாட்டுகள் அடங்கிய இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையில் 37 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையொப்பமிட்டுள்ளனர். பிரேரணையில் எதிர்க்கட்சியிலுள்ள மலையக நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையொப்பமிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## உயர்தரப்...

நீதிமன்றம் தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளது.
க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் சிலர் இணைந்து, அந்தப் பரீட்சையை ஒத்திவைக்குமாறு கோரி மனுத்தாக்கல் செய்திருந்தனர். அந்த மனுவையே விசாரணைக்கு எடுக்காமல் நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது. (அ-ம)

## கன்னியாயில்...

களைப் பாதுகாத்து பராமரிப்பதற்கு தொல்லியல் திணைக்களத்திற்கு முழு அதிகாரம் உள்ளது. அங்கு புதிதாக எந்தக் கட்டுமானங்களையும் அமைப்பது எமது நோக்கம் அல்ல - என்றார். (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிற்ப ஓவியக் கண்காட்சியும் தெருவெளி அரங்க நிகழ்வும்

ஈழத்தமிழ்க் கலைஞர் ஒன்றியமும், நித்திலம் கலையகமும் இணைந்து நடத்தும் 'சிற்ப ஓவியக் கண்காட்சியும், தெருவெளி அரங்க நிகழ்வும்' நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு, நாச்சிமார்கோவிலடி ராஜா கிறீம் ஹவுஸ், சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறும். நிகழ்வில் பிரதம விருந்தினராக கலாபூஷணம் சு.பத்மநாதன் கலந்துகொள்வார். நிகழ்வில் ஓவியக்கண்காட்சி, சிற்பக் கண்காட்சி, ஆரோக்கிய பானம் அறிமுகம், பொம்மலாட்டம் தெருவெளி அரங்க நிகழ்வு, பாடுவோர் பாடலாம் உங்கள் கலைத்திறனை வெளிப் படுத்த ஒரு சந்தர்ப்பம் உள்ளிட்ட நிகழ்வுகள் இடம்பெறும். (க)

**விற்பனை ஊழியர்கள் தேவை**

LG Abans நிறுவனத்திற்கு பின்வரும் கிளைகளிற்கு 25 வயதிற்குட்பட்ட விற்பனை ஊழியர்கள் (ஆண்கள் மட்டும்) தேவை.

திருநெல்வேலி - 074 223 3412
நெல்லியடி - 077 955 4229
(cs61941) (N.1)

## உடனடி வேலைவாய்ப்பு

பின்வரும் பணிநிலைகளுக்கு ஆண், பெண் பணியாளர்கள் தேவை

- கனரக வாகன சாரதி (Heavy Vehicle Driver)
- விற்பனையாளர்
- தரவு பதிவாளர் (அடிப்படை கணினி அறிவு விரும்பத்தக்கது)
- களஞ்சிய காப்பாளர்
- காசாளர் (அடிப்படை கணினி அறிவு விரும்பத்தக்கது)
- பொதி செய்பவர்
- மேற்பார்வையாளர்


நேரில் சமூகம் தரவும்.

முகவரி : **NORTHWAY FAMILY MART**
இல.184, பலாலி வீதி, திருநெல்வேலி.

தொடர்பு :- 0777647645
மின்னஞ்சல் :- northwayfamilymart18@gmil.com
(CR 47821) A

## மரண அறிவித்தல்

தோற்றம் 17 . 08 . 1963



மறைவு 22 . 07 . 2026

### தம்பிராசா சித்திரவேலாயுதம்

திருகோணமலை பாலையூற்றைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் பிரம்படியை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிராசா சித்திரவேலாயுதம் அவர்கள் 22.07.2026 புதன்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிராசா - அழகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற அமரசிங்கம் மற்றும் பரஞ்சோதி தம்பதியரின் அன்பு மருமகனும், ஜெயராணியின் பாசமிகு கணவனும், சுஜீவன், ஜனார்த்தன், ஜதுஷலா ஆகியோரின் அன்புத் தந்தையும், விமலாதேவி, ருக்மணிதேவி, கமலாதேவி, காலஞ்சென்றவர்களான இதயராணி, தட்சணாமூர்த்தி மற்றும் ஸ்ரீதரன், காலஞ்சென்ற சிவகணேஷன் மற்றும் சிவநேசன், அழகேஸ்வரி, சிவனேஸ்வரி, சிவராசா ஆகியோரின் பாசமிகு சகோதரனும், தர்மலிங்கம், யோகராசா, வேலாயுதம், மைதினி, ஜெயராணி, பாலகுமார், காலஞ்சென்ற பிரபாகரன் மற்றும் அனு, காலஞ்சென்ற தவராஜா மற்றும் ஜெயக்குமார், ஜெயகௌரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.07.2026) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்.


80/43, பிரம்படி வீதி,
கொக்குவில்,
யாழ்ப்பாணம்.

074 065 1915
076 625 4945
077 642 3560
(CS 61939) N-1

## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் வைத்திலிங்கம் சிவராசபதி

(முன்னாள் கட்டட ஒப்பந்தக்காரர்)



யாழ். நீர்வேலி போயிட்டி வினோபாஜியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் சிவராசபதி அவர்களின் 10ம் ஆண்டு நினைவஞ்சலி.

எங்கள் அருமைத் தந்தையே
எம்மை விட்டு எங்கு சென்றீரோ?
எம்மை விட்டு பிரிந்திடவே உந்தனுக்கு
என்றும் மனம் வராது ஐயா
வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானடைந்து
பத்து ஆண்டு ஆனாலும் ஐயா
ஆறாது உங்கள் பிரிவுத்துயர்!
அன்பாலும் பண்பாலும் அரவணைத்து
எம்மை வழிநடத்திய அந்த நாட்கள்
எங்கள் நினைவலைகளில் என்றும் சுழல்கிறதே ஐயா!
நீங்கள் எம்மை விட்டு நீண்டதூரம் சென்றாலும்
உங்கள் அறிவுரைகள் அரவணைப்புக்கள்
என்றும் எங்கள் நெஞ்சங்களில் உயிர்வாழும் ஐயா!
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்..!

தோற்றம் 31.12.1941
மறைவு 09.07.2016

மகன் - ஜெயந்திரா குடும்பம் (சுவிஸ்)
(CS/61934) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 24.07.2026இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.